செங்கோல்

ஆசிரியர் ம.பொ.சிவஞானம்

மலர் 12 ★ சென்னை 24-12-61 ஞாயிறு 20 பைசா ★ இதழ் 4

மாநில சுயாட்சிக்கு மௌலானா ஆசாத் ஆதரவு

ம.பொ.சி.



எந்த பிரிட்டிஷ் ஆட்சி, தனது அமைச்சர்களில் மூவரை அனுப்பி "மாநிலங்களின் சுயாட்சி; மத்தியில் சமஷ்டி" என்ற அடிப்படையில் சுதந்திர இந்தியாவைப் பிரகடனம் செய்ததோ அதே ஆட்சி பின்னர் தன் கருத்தை மாற்றிக்கொண்டுவிட்டது.

ஆம்; பிரிட்டிஷ் மந்திரி சபைத் திட்டத்தை முதலில் ஏற்றுக் கொண்டு, பின்னர் மத்திய ஆட்சியிடம் அதிகாரங்களைக் குவிக்கும் போக்கில் திட்டத்தைத் திருத்த முயன்றார் நேரு. அதையே காரணம் காட்டி, பிரிட்டிஷ் திட்டத்திற்குத் தான் அளித்த ஆதரவை வாபஸ் பெற்றார் முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னா. இதன் விளைவாக புதை குழிக்குப் போன பாகிஸ்தான் திட்டம் மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்தது. நாடெங்கும் வகுப்புக் கலவரங்களும், நவகாளி சம்பவங்களும் ஏற்பட்டன. இவற்றையெல்லாம் கண்டுதான் பிரிட்டிஷ் ஆட்சி மனமாற்றம் அடைந்தது. புதிய அரசியலை வகுக்கும் பொறுப்பை காங்கிரஸ்-லீக் கட்சிகளின் மீது சுமத்தி இந்தியாவை இரு நாடுகளாகத் துண்டாடவும், துண்டாடப்பட்ட நாடுகளிலிருந்து தான் வெளியேறவும் முடிவு செய்தது பிரிட்டிஷ் ஆட்சி. இத்தனை கேடுகளுக்கும் காரணம், மாநிலங்களுக்குப் பரிபூரண சுயாட்சி வழங்க காங்கிரஸ்தலைமை இணங்காததுதான். ஆனால், இருளில் ஒளிபோல விளங்கினார் வைசிராய் வேவல். அவர் ஆசாத்தின் ஆலோசனையின் பேரில் உருவான பிரிட்டிஷ் மந்திரி சபைத் திட்டத்தையே விடாப்பிடியாக ஆதரித்தார். அவரது போக்கை பிரிட்டிஷ் ஆட்சி வெறுக்கவே, அவர் தமது பதவியை இராஜினாமா செய்தார்.

இவை "இந்தியா விடுதலை வெற்றி" என்ற தமது நூலில் மௌலானா ஆசாத் தரும்தகவல்களாகும்.

லார்டு வேவலுக்குப் பதில் லார்டு மவுண்ட்பாட்டன் இந்தியாவின் வைசிராயாக வந்தார். அவர் பாரதத்தைத் துண்டாடும் திட்டத்துடனேயே வந்திருக்க வேண்டும் என்று சந்தேகிக்கிறார் மௌலானா ஆசாத். லார்டு மவுண்ட்பாட்டனைச் சந்தித்த பிறகுதான் சர்தார் பட்டேல் பாகிஸ்தான் பிரிவினையை ஆதரிக்கலானார் என்பதை முன்பே அறிந்தோம். அப்போதும், காந்தியடிகள் தேசம் துண்டாடப்படுவதைக் கடுமையாக எதிர்த்தார் என்பதையும் கண்டோம். மேலும் ஆசாத் தரும் தகவல்களை அறிவோமாக:

"லார்டு மவுண்ட்பாட்டன் அரசியல் பிரச்சினைக்கு ஒரு புதிய திருப்பத்தைத் தர முனைந்தபோது, பிரிவினை தவிர்க்க முடியாதது என்ற கருத்தை வைசிராய் நிர்வாக சபையில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர்களின் மனதில் பதிய வைக்கப் பார்த்தார்.

...அந்தக் கருத்தை ஏற்கும் மனப்பான்மையில் சர்தார் பட்டேல் இருப்பதைக் கண்டார். லார்டு மவுண்ட்பாட்டன் மதிநுட்பம் மிகுந்தவர். தமது இந்திய சகாக்களின் மனத்தையும் கண்டறியக் கூடியவர். தமது கருத்துக்குப் பட்டேல் இசைவாக இருக்கிறார் என்பதைக்கண்டு கொண்ட தருணத்தில், அவரைத் தம் வசப்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் தமது சாமர்த்தியத்தையும் வசீகர சக்தியையும் அவர் பிரயோகித்தார். அந்தரங்கப் பேச்சுக்களில் சர்தார் பட்டேலைப் பற்றிப் பிரஸ்தாபித்த போது, "அவர் 'வால்ரட்' போன்றவர். வெளி ஓடு கெட்டியாக இருக்கும். ஆனால், அதை உடைத்தவுடன் உள்ளே இருக்கும் சோறு மிருதுத் தன்மை கொண்டது என்று அடிக்கடி சொல்லுவார்"

என்கிறார் ஆசாத். ஆம், தமது சாகஸங்களால் காங்கிரஸ் தலைவர்களில் சர்தார் பட்டேலை முதன் முதலாகப் பாகிஸ்தான் பிரிவினைக்கு இணங்கச் செய்துவிட்டார் மவுண்ட்பாட்டன். தேசம் துண்டாடப்பட வேண்டுமென்ற ஆங்கிலேயரின் சதித் திட்டத்திற்கு முதன் முதலாக ஆதரவு தந்த 'பெருமை' சர்தார் பட்டேலுடையது தான் என்ற அந்தரங்கத்தை ஆசாத் எழுதிய நூல் நமக்கு அறிவிக்கின்றது. ஆசாத் மேலும் சொல்லுகிறார்;

"...சர்தார் பட்டேலுக்கு நம்பிக்கை விளைவித்த பிறகு லார்டு மவுண்ட்பாட்டன் ஜவகர்லால் விஷயத்தில் கவனம் செலுத்தினர். முதலில் ஜவஹர்லால் சிறிதுகூட இசைவு தெரிவிக்கவில்லை. பிரிவினைக் கருத்துக்கு எதிராக அவர் கடுமையான அபிப்பிராயம் தெரிவித்தார். ஆனால் லார்டு மவுண்ட்பாட்டன் விடாமுயற்சியில் ஈடுபட்டார். படிப்படியாக ஜவஹர்லாலின் எதிர்ப்பு தேய்ந்துகொண்டே வந்தது. லார்டு மவுண்ட்பாட்டன் வந்து ஒரு மாதத்திற்குள், பிரிவி

(2ம் பக்கம் பார்க்க)

ஏகாதிபத்தியம் இந்தியாவைத் துண்டாடியது!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

னையை உறுதியாக எதிர்த்து வந்த ஜவஹர்லால், அதன் ஆதரவாளராக மாறாவிடினும் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு மாறிவிட்டார்.

“சர்தார் பட்டேலின் வாதங்கள் ஓரளவுக்கு அவர் விஷயத்தில் பயனுள்ளவையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவரிடம் இன்னும் அதிகமான செல்வாக்கு லேடி மவுண்ட்பாட்டனுக்கு இருந்தது. அவர் மிக மிகச் சிறந்த புத்திசாலி. மிகக் கவர்ச்சிகரமான நேசப் பான்மை மிகுந்த சுபாவம் படைத்தவர்”

மவுண்ட்பாட்டன் விரித்த வலையில் பட்டேலும், நேருவும் விழுந்தனர்!

து பாகிஸ்தான் பிரிவினைக்கு
வைசிராய் விரித்த வலையில் பண்
த நேரு விழுந்த பரிதாப சம்
வத்தின் சித்திரம்! இந்தப் பரி
நாப அரங்கில், இதோ,
கிருஷ்ண மேனனும் தோன்றி
நமது பங்கைக் குறைவரச் செய்
கிறார்.

“ஜவஹர்லால் இந்தப் பிரச்னையின் மீது கவர்ச்சித்திருக்கக் கூடிய மற்றொரு நபர் கிருஷ்ணமேனன். அவர் ஜவஹர்லாலிடம் விசேஷ மதிப்பு வைத்திருந்தார். அவரது யோசனைக்கு ஜவஹர்லால் பெரிதும் செவி சாய்ப்பார் என்பது நான் அறிந்ததே. இஃது எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. காரணம், கிருஷ்ணமேனன் தவறான புத்திமதிகளை அடிக்கடி கூறி வந்ததுதான்.”

-என்கிறார் ஆசாத். இதற்கு மேல் மாநில சுயாட்சிக்கு எதிராக, பாகிஸ்தானை ஆதரிக்கும் கட்சி ஒன்று காங்கிரஸ் காரியக் கமிட்டியில் தோன்றிவிட்டது.

தவிர்க்கும் பிரிட்டிஷ் திட்டத்திற்கு ஆதரவளித்ததை முன்பே கூறினோம். ஆனால், சர்தார் பட்டேலின் செல்வாக்கு காந்திஜியின் கருத்தை மாற்றிவிட்டது.

“லார்டு மவுண்ட்பாட்டனை காந்திஜி சந்தித்து, மீண்டும் மறுநாள் கண்டார். மறுபடியும் ஏப்ரல் 2-ம் தேதி கண்டு பேசினார். முதல் கூட்டத்திற்குப் பின் சர்தார் பட்டேல் வந்தார். இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தச் சந்திப்பில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் மறுபடியும் காந்திஜியைக் கண்டபோது என் வாழ்நாளிலேயே மிகப்பெரிய அதிர்ச்சி அடைந்தேன். அவரும் மாறிவிட்டிருந்தார்.

சர்தார் பட்டேல் ஏற்கெனவே பிரயோகித்து வந்த வாதங்களை காந்திஜி எடுத்துரைக்கத் தொடங்கியது எனக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் கொடுத்தது. இரண்டு மணி நேரம் அவரிடம் மன்றாடினேன். ஆனால் அவரது மனதை மாற்றமுடியாது போய்விட்டது.”

-என்கிறார். இப்படியாக காந்திஜியும் மாநில சுயாட்சி திட்டத்திற்கு எதிராக மனமாற்றமடைந்ததை துக்கந்தோய்ந்த வாசகங்களாய் வருணிக்கிறார் ஆசாத். மேலும் சொல்கிறார்:

...இந்த விஷயம் முழுவதையும் பற்றி நான் ஆழ்ந்து சிந்தித்தேன். காந்திஜி தமது அபிப்பிராயத்தை இவ்வளவு விரைவில் எப்படி மாற்றிக் கொள்ளக்கூடும்? சர்தார் பட்டேலின் செல்வாக்குத்தான் இதற்குக் காரணம் என்று

ரெஸ் உடன்பட்டது. ஆகையால்தான் , மாகாணங்களுக்கு முழு சுயாட்சி வழங்கப்பட்டது. ஆனால் மொழி, வகுப்பு, பண்பாடு ஆகியவற்றால் பிரிந்து கிடக்கும் நாட்டில், மத்திய அரசாங்கம் பலக்குறைவானதாக இருக்கும்பட்சத்தில், பிரிவினைப் போக்குகளை ஊக்குவிப்பதாகத்தான் ஏற்படும் என்று லார்டு மவுண்ட்பாட்டன் வாதித்தார். முஸ்லிம் லீக் இருக்கவில்லையானால், நாம் பலம் பொருந்திய ஒரு மத்திய அரசாங்கத்துக்குத் திட்டமிட்டு இந்திய ஐக்கியத்தைக் கருத்தில் கொண்டு, ஓர் அரசியல் சட்டத்தைத் தயாரிப்பது விரும்பத்தக்கதாக இருக்கும்; வட மேற்கிலும் வட கிழக்கிலும் சிறிய பகுதிகளைக் கொடுத்துவிட்டு, பலம் பொருந்திய, உறுதியாக இணைக்கப்பட்ட இந்தியாவை உருவாக்குவது நல்லதென்று லார்டு மவுண்ட்பேட்டன் யோசனை கூறினார்.

“இந்த வாதம் சர்தார் பட்டேலைக் கவர்ச்சித்தது. சர்தார் பட்டேலை மட்டுமின்றி, ஜவஹர்லாலையும் இந்த வாதங்கள் பாதித்தன என்று எனக்குத் தோன்றியது”

ஆம்; மாநிலங்கட்கு சுயாட்சி வழங்குவதால் மத்திய ஆட்சி பலமற்றதாக இருக்கும் என்று வைஸ்ராய் மவுண்ட்பாட்டன் கூறியதில் உண்மை இருக்கிறது. ஆனால், பாதுகாப்பு, போக்குவரத்து, அயல் நாட்டு உறவு ஆகிய மூன்று' அதிகாரங்கள் மத்தியில் இருக்கும் போது, பிரிவினைச்சக்திகள் வலுத்துவிடுமென்று வைஸ்ராய் கூறியது அவருடைய இராஜதந்திரத்தையே காட்டுகிறது. இந்திய முதலாளித்துவத்தின் தாயகமான கூர்ஜரத்தில் பிறந்த சர்தார் படேல், தொழில்—வர்த்தகம்—நிதி ஆகிய அதிகாரங்களும் மத்தியிலிருக்க வேண்டுமென்று விரும்பியது

லங்கட்குச் சுயாட்சி வழங்கும் திட்டத்தை மௌலானா ஆசாத் அறிவித்தபோது, அதனை சர்தார் படேல் ஐயக்கண்கொண்டு பார்த்ததை அறிந்தோம். மத்திய ஆட்சிக்கு நிதி, சுங்கம் ஆகிய அதிகாரங்களிருக்க வேண்டுமென்று பட்டேல் கூறியதை அறிந்தோம். ஆனால் பிரிட்டிஷ் மந்திரி சபைத் திட்டத்தை அமுல் நடத்த வைஸ்ராய் வேவல் திடமனம் கொண்டதால், அப்போது சர்தார் படேல் மாநில சுயாட்சி திட்டத்தை ஆதரிக்கும் பாவனையில் செயல் பட்டார். பின்னர் தமது இராஜ தந்திரத்தால் நிலைமையை மாற்றிவிட்டார்.

மௌலானா ஆசாத் முயற்சியிலும் ஒரு குறையுண்டு. அவர் மாநில சுயாட்சிக்கு ஆதரவாக வேலை செய்தது, முஸ்லிம் லீகை திருப்திப் படுத்தவும், பாகிஸ்தான் பிரிவினையைத் தவிர்க்கவுமேயாகும். மற்றபடி, இந்தியாவானது மொழிவழி பல்வேறு தேசிய இனங்களின் தனித்தனித் தாயகங்களைக் கொண்ட ஒரு உபகண்டம் என்ற எண்ணத்தாலன்று. இந்தக் குறைபாடுதான், ஆசாத்தின் முயற்சி தோற்றதற்குக் காரணம்.

இது எப்படியாயினும், “மாநிலங்கட்குச் சுயாட்சி; மத்தியில் சமஷ்டி.” என்று 1945ல் நான் அறிவித்த கொள்கை, சிறிது காலத்திற்குப் பிறகு காங்கிரஸ் மகாசபைத் தலைவரின் கருத்திலும் உதித்தது என்பதையும், பின்னர் இது காங்கிரஸ் காரியக்கமிட்டி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஆகியவற்றின் ஆதரவைப் பெற்றதோடு, பிரிட்டிஷ் மந்திரிசபையும் அந்தச் சித்தாந்தத்தின் அடிப்படையில் ஒரு திட்டத்தைப் பிரகடனம் செய்ததையும், ஆசாத் அவர்கள் எழுதியுள்ள நூலின் மூலம் இப்போது அறிந்து கொள்கின்றோம்.

சர்தார் பட்டேலும் ஜவஹர்லாலும் அந்தக் கட்சிக்கு வழி காட்டினர்.பாவம்! மௌலானா ஆசாத் காந்தியடிகளிடம் அடைக்கலம் புகுந்தார்.

> “இறுதியான நடவடிக்கைகளில் இறங்கவேண்டாமென என் சகாக்களிடம் வற்புறுத்திச் சொன்னேன்...படேல் வேறெந்தக் கருத்தையுங்கூட கேட்கத் தயாராயிருக்கவில்லை.”

–என்று கூறி தமது நிர்க்கதியான நிலையை நமக்குப் புலப்படுத்துகிறார் ஆசாத். காந்திஜி மட்டும் பிரிவினைக்கு எதிராக இருந்ததை, மாநிலங்கட்கு சுயாட்சி அளிப்பதன் மூலம் பிரிவினையை

எனக்குத் தோன்றுகின்றது.”

–என்று கொஞ்சம் துணிவாகவே பட்டேலின் மனப்போக்கைப் படம்பிடித்துக் காட்டுகின்றார் ஆசாத். இப்படித் தேசத்தைத் துண்டாட லார்டு மவுண்ட்பாட்டன் விரித்த வலையில், முதலில் பட்டேலும் நேருவும், அடுத்து காந்திஜியும் விழக் காரணமென்ன? அந்த மாபெரும் தலைவர்கள் மனமாற்றமடையும்படி மவுண்ட்பாட்டன் உபயோகித்த மந்திரக்கோல் தான் யாது? இதோ, ஆசாத்தே கூறுகின்றார்:

> “முஸ்லிம் லீக்கின் ஆட்சேபணைக்கு மதிப்புக் கொடுத்துத்தான் பலக்குறைவான மத்திய அரசாங்கத்துக்கு காங்

மகாத்மா அடைந்த மனமாற்றமும், ஆசாத்துக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும்!

இயற்கையே. இனம் இனத்தோடு சேருமென்பது போல, வெளியேறிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியம், தான் இருந்த இடத்தில் இன்னொரு ஏகாதிபத்தியத்தைத் தோற்றுவிக்க விரும்பியது. அதன் மூலம், இந்தியாவைப் பிற்போக்குச் சக்திகளின் கூடாரமாக்கி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நட்புப் பிடியில் வைப்பதற்கு விரும்பினார் வைஸ்ராய்.

ஆசாத் கொடுக்கும் தகவல்களிலிருந்து, ஆரம்பத்தில் மாநி

முஸ்லிம் லீகும், மாநிலங்கட்கு சுயாட்சி வழங்கப்படும் அடிப்படையில் பிரிவினையைக் கைவிட்டதையும் ஆசாத் நூலின் மூலம் அறிகின்றோம். பின்னர், காங்கிரஸ் தனது கருத்தை மாற்றிக் கொண்டு, மத்தியில் பலம் வாய்ந்த அரசாங்கத்தை அமைக்க முயன்றதால் தான், பாரதத்தைத் துண்டாட வேண்டிய நிர்பந்தம் பிரிட்டிஷாருக்கு ஏற்பட்டது.

(11ம் பக்கம் பார்க்க)

போராட்டத்தின் மூலமே தமிழகம் சுயாட்சி பெற முடியும்!

வாலியைக் கொன்றது நீதியே!

மயிலை தே. சீனிவாஸர்ச்சாரியார்

‘வாலியைக் கொன்றது நீதியா, அநீதியா?’ என்று வினா எழுப்பிக் கொண்டு, திரு. ம. பொ. சி. அவர்கள் விரிவாக ஆராய்ச்சி செய்து, கடைசியில் “அநீதிதான்” என்று தேர்ந்து – ஆயினும், இந்தக் களங்கத்தை இராமன் மீது காட்டிய வான்மீகிக்கும் கம்பனுக்கும் நோக்கம் என்ன என்பதையும் அழகாக விளக்கியுள்ளார்கள்.

திரு. ம. பொ. சி. அவர்கள் மாமேதைகளில் ஒருவர். நாவன்மை, எழுத்து வன்மை, ஆராய்ச்சித்திறன் இத்தனையும் ஒருங்கே அமையப்பெற்ற பாக்கியசாலி. இத்தனைக்கும் மேலாகத் தெய்வ பக்தி மிக்கவர்.

இத்தகைய ஒரு பெரியாரின் ஆராய்ச்சிக்கு எதிராக நான் இப்போது எழுதுகிறேன் என்றால், இது அகங்காரத்தாலன்று; ஆராய்ச்சித் துறையில் இருக்கும் ஆர்வத்தால் மட்டுமே.

இராமாயணத்தில் இராமன் தர்ம மூர்த்தி – தர்மமே உருவெடுத்தவன் என்று கூறப்பட்டுள்ளது.

என்னவென்றால், அடிபட்ட வாலி உயிர் போகும் தருவாயில் பரிதாபமான நிலையில் இருந்து கொண்டு ராமனைப் பார்த்துக் கேள்விகள் கேட்கிறான். வேறு இடங்களில் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததில்லை.

அடிபட்டான் என்றால் – அதுவும் இராமனிடம், உடனே உயிர் துறப்பதுதான் நிகழ்ச்சி.

இங்கு அதற்கு மாறாக, வாலி குற்றுயிராக இருந்துகொண்டு கேட்கிறான்.

இராமனும், முதலில் மறைந்திருந்து அடித்தவர், பிறகு வாலிக்கு எதிரே வந்து கம்பீரமாக நின்றுகொண்டு அவன் பேச்சைக் கேட்கிறார்.

தான் தகாத செயல் செய்துவிட்டதாக அவர் சிறிதும் நினைக்கவில்லை. காரியம் முடிந்துவிட்டது என்று அவ்விடத்தை விட்டு அகன்றுவிடவும் இல்லை.

மாறாக, வாலியின் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறார். பிறகு தமையனை வதைக்க, தான் காரணமாக இருந்ததை எண்ணி துடிதுடித்து அழுகின்ற சுக்ரீ

தழுவு நூல்கள் உண்டு. ஏன்? வடமொழியிலே கூட இராமாயணம், பாரதம் முதலிய நூல்களைத் தழுவி எழுதப்பட்ட நூல்கள் எண்ணற்றவை.

இப்படி உள்ள முதல் நூல், தழுவு நூல்களை நன்கு கவனித்தவர்களுக்கு இருவிஷயம் தெள்ளெனப் புலப்படும். அதாவது, சிற்சில விடங்களில் கதையின் போக்கு, சில நிகழ்ச்சிகள் மாறுபடும். ஆனால், முக்கியமான விஷயங்கள் மாறா.

உதாரணமாக, சீதையை இராவணன் கையில் தொட்டுத் தூக்கியதாக வான்மீகியில் இருக்க, கம்பர் அதை மாற்றி பூமியோடு பெயர்த்து எடுத்ததாகப் பேசுகிறார்.

இங்கு உண்மை எப்படி இருந்தபோதிலும், தழுவு நூலில் சிறிய மாற்றங்கள் செய்ய புலவர்களுக்கு உரிமை இருந்தது என்பது புலப்படுகிறது.

இந்த விஷயத்தை மனதில் நன்கு பதிய வைத்துக்கொண்டு பார்க்குமிடத்து, கம்பருக்கும் வால்மீகிக்கும் உள்ள கதைப் போக்கின் வித்தியாசம் பெரிய

அதாவது. “ஒரு நூலில் ஒ விஷயம் சரியாக விளக்கப்படவில்லை என்றால், அதை சம்ப தப்பட்ட வேறு ஒரு நூலிலிருந்து தெளிந்துகொள்ள வேண்டும்” என்பதே.

இந்த வகையில் வால்மீகி, இராமன் மூலமாகக் கூறும் பதிலைக் கவனிப்போம்.

வாலி செய்த குற்றம், தம்பி மனை புகல்.

இங்கு, குரங்கினமானதால் தங்களுக்குப் பிறர் மனை புகுதல் என்பது பிழை இல்லை என்கிறான் வாலி. இராவணன்கூடத் தான் பேசுகிறான், தாங்கள் அரக்கர் குலமாகையால் பிறர் ஸ்திரீகளை பலாத்காரமாக அபகரிப்பதோ, புணருவதோ தங்கள் குல தருமம்” என்று.

இதை யாரும் ஆதரித்துப் பேசவில்லை. அதுபோல, வாலி–சுக்ரீவர்கள் குரங்கினமேயாயினும், சாதாரணக் குரங்குகள் போல் இல்லை; இவர்கள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவர்கள், படித்தவர்கள், பண்புடையவர்கள்–என்பது பெரியோர்கள் ஆராய்ந்து கண்ட உண்மை.

இங்கு சிலர் நினைக்கிறார்கள், “வாலி இறந்தபின் சுக்ரீவன் தாரையுடன் கூடி வாழ்கிறான். இது குற்றமாகாதென்றால், வாலியானவன் சுக்ரீவன் மனைவி ருமையுடன் இருந்தது மட்டும் எப்படிக் குற்றமாகும்” என்று.

இராமனின் குணங்களை மக்கள் வாயாரப் புகழ்கிறார்கள். இத்தகைய ஒரு நாயகனிடம் குற்றம் என்பது இருக்கக் கூடாதுதான். ஆனால், என்ன காரணத்தாலோ அவனிடமும் மக்களில் சிலர் குற்றங் காணத் தொடங்கினர். இது இப்போதல்ல; ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகவே உண்டு. ஒரு குற்றமல்ல; மூன்று. அவையாவன :

- தாடகை (ஸ்திரீ) வதம்.
- கரன் என்பவனுடன் யுத்தத்தில் ஒரு அடி பின்னால் வைத்தது.
- வாலி வதம்.

இம்மூன்றில், எக்காரணம் பற்றியோ முதலிரண்டும் இப்போது அதிகம் பேசப்படுவதில்லை. போகட்டும்.

வாலி வதம்

- வாலி கொல்லப்பட வேண்டியவனா?
- ஆமென்றால், அவன் செய்த குற்றம் என்ன?
- குற்றமிருப்பினும், இராமன் குறுக்கிட நியாயம் உண்டா?
- நியாயமே இருப்பினும், மறைந்து அடித்தது ஏன்?

இந்தக் கேள்விகள் பிறக்கின்றன. இங்கு ஒரு வேடிக்கை வனை இன்சொல் பேசி ஆற்றுகிறார். வாலியின் ஈமக்கடன்களைச் செய்து முடிக்கும்படியும் கூறி, அவர்களுடன் கூடவே இருந்து எல்லாவற்றையும் நடத்தி வைக்கின்றார்.

அதுமட்டுமல்ல; அங்கதன், தாரை, சுக்ரீவன் முதலியோர் விக்கி அழும்போது, இராமன் தானும் அழுததாய் வான்மீகி வரைகிறார்.

இராவணன் இறந்த பின்பும் இதேபோல் விபீஷணன் முதலியோர் அழ, அப்போது ராமன் அவர்களைத்தேற்றி, ஈமக்கிரியைகளைச் செய்யத் தூண்டுகிறார்.

இதிலிருந்து தேறுவது என்ன? இராமன் தனது கடமைகளிலிருந்து பிறழாதவன் என்பதோடு, பிறரையும் கடமைபிறழாவண்ணம் நடத்துபவன் என்பதே.

இனி, முன் எழுந்த கேள்விகளுக்குப் பதில் என்ன? இதை வால்மீகி–கம்பர் இருவரையும் சேர்ந்தே கவனிக்க வேண்டும் என்பது என் கருத்து.

இங்கு முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உண்டு.

வால்மீகி இராமாயணம் முதல் நூல். அதைத் தழுவி எழுதப்பட்டது கம்ப இராமாயணம்.

தமிழிலே மட்டுமின்றி, பிற பாஷைகளிலும் இத்தகைய தல்ல.

பெரிய விஷயங்களில் மாறுபாடே இருக்காது. ஆக, வாலி வதத்தில் வால்மீகிக்கும் கம்பருக்கும் வித்தியாசம் இருக்கிறதென்றால், எந்த அம்சத்தில் இருக்கிறது என்று கவனிக்க வேண்டும்.

வாலியை ராமன் அடித்ததை இருவரும் பேசியுள்ளனர்.

மறைந்து அடித்ததையும் மறைக்காமலே பேசியுள்ளனர்.

ராமனை வாலி கேள்விகள் கேட்பதும் இரண்டிலும் கூறப்பட்டுள்ளது.

பின் ஒரே ஒரு விஷயத்தில்தான் வித்தியாசம். அதாவது, இராமனே வாலிக்கு பதில் உரைத்ததாக வால்மீகியில் இருக்க, கம்பர் இலக்குமணன் பதில் கூறுவதாகக் காட்டியிருக்கிறார்.

இது ஒரு பெரிய விஷயமல்ல.

கம்பரில் விட வால்மீகியில் பதில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் வால்மீகியை அநுசரித்து இராமன் பதிலை ஆராய்வதும் அது சரியான பதில்தானா என்று சீர்தூக்கிப் பார்ப்பதுமே சரியான வழி என்று நினைக்கிறோம்.

இதை வடமொழியில் "அநுக்தம் அந்யதோ க்ராஹ்யம்" என்பார்கள்.

இப்படிப்பட்ட இடங்களில்தான் தர்ம சூட்சமங்களைப் பெரியோர் கண்ட வழியில் அறிய வேண்டும். வாலி இறந்த பின்னரே சுக்ரீவன் தாரையுடன் வாழ்கிறான். சுக்ரீவன் உயிருடன் இருக்கையிலேயே அவன் மனைவியை வாலி அபகரித்தான்.

சுக்ரீவன் செயலில் அபகரித்தல் என்பதில்லை. "அண்ணன் இறந்த பிறகானாலும், அவன் மனைவி தாய்க்குச்சமம் அன்றோ? சுக்ரீவன் செயல் எப்படி சரி" என்று மறுபடியும் வினா எழலாம்.

இதற்குப் பதில், "தர்மம் என்பது எல்லார்க்கும் ஒரே விதமில்லை" என்பதுதான்.

குலத்திற்குக் குலம் தருமம் மாறும். அதாவது–ஒழுக்க நெறி.

இன்றைக்கு நம் நாட்டில் ஒரு சில குலத்தில் கணவன் இறந்த பின் பெண்கள் மற்றொருவனை மணக்கின்றனர். இதை யாரும் வித்தியாசமாக நினைப்பதில்லை. இதில் ஒழுக்கக்கேடு என்பதில்லை. ஒழுங்கு முறைக்கு முரண்பாடில்லை. இதனால் "யாவரும் அவ்விதமே செய்யலாமோ?" என்று சிலர் எண்ணி விட வேண்டாம்.

கணவன் மரணத்திற்குப் பின்பும் கட்டுப்பாட்டுடன் இருப்பது மெச்சத்தக்கதே. ஆக, தம்பி

(4ம் பக்கம் பார்க்க)

மறைந்து கொன்றது இராமனுக்கு இழுக்கே!

[3ம் பக்கத் தொடர்ச்சி]

உயிருடனிருக்கையில் அவன் மனைவியாளை வாலி அபகரித்தது பெரிய குற்றமே. இதற்கு வதம்தான் தண்டனை என்பது சாத்திர முடிபு.

குற்றம் இருப்பினும், இராமன் குறுக்கிட நியாயம் உண்டா?

இதற்கு வால்மீகியின்படி, "பரதன் ராஜ்யம் செய்வதாகவும் அதற்கு அநுகூலமாக, தான் காட்டில் இருக்கையிலும் அதர்மத்திற்குத் தண்டனை கொடுத்து தருமத்தை நிலைநாட்டுவதாகவும்" இராமன் பேசுகிறான்.

இராமன் காட்டுக்கு வந்து அப்போது அவள் கேட்கிறாள், "தந்தை சொல் என்கிறாயே, நான் சொல்கிறேன் நீ காட்டுக்குப் போகக்கூடாது. என் வார்த்தையை நீ மதிக்க வேண்டாமா?" என்று.

இதற்கு இராமன் சொல்லும் பதில் "தாயே! நீயும் அவர் பேச்சுக்குக் கட்டுப்பட வேண்டும்" என்பதே. தாய் சொல்லுக்கும் தந்தை சொல்லுக்கும் முரண்பாடு ஏற்படுமானால், தந்தை சொல்லுக்கே முதல் மதிப்பு. இதை இங்கு இராமன் சொல்லாமல் சொல்கிறார். ஆக, கைகேயி சொன்னதற்காக இராமன் போகவில்லை. தந்தையின் ஆணை என்றுதான் அதை மதித்தான். ஆகையால், கைகேயி களைக் காக்க அவர் உடந்தையாக இருந்தாலும், அவர் ஆயுதம் எடுக்கவில்லை என்றும், அதேபோல் இங்கு இராமன் தான் ஆயுதம் எடுக்காமல் வேறுவகையில் உதவி புரிந்திருக்கலாம் என்றும் பேசப்படுகிறது.

கிருஷ்ணன் விஷயம் வேறு; ராமன் விஷயம் வேறு.

கிருஷ்ணன் எங்குமே ஆயுதம் எடுத்ததாகச் சரித்திரம் இல்லை. சகடாசுரனைக் காலால் உதைத்தார், காளிங்கனைக் காலால் மிதித்தார், கொக்கின் அலகைப் பிளந்தார், பூதனையை பால் குடித்து உறிஞ்சினார், அவரவர் மாய்ந்தனர். கம்ஸனையே மல்யுத்தத்தில்தான் மாய்த்தார்.

இனிமறைந்து அடிப்பானேன்? என்கிற ஒரே கேள்விதான் நிற்கிறது.

இதற்கு இராமன் கூறும் பதில்:- "அரசர்கள் மிருகங்களை வேட்டையாடும்போது வலை விசியும், கூண்டு வைத்தும், அம்புஎய்தும், மறைந்தும் நேராகவும் எந்தவிதத்திலும் அடிப்பது உண்டு. ஆகையால் இது என் இஷ்டம் என்கிறார். இங்கு ஒரு சந்தேகம் எழலாம். முன்பு வாலியை "நீ குரங்கினம் என்று சொல்லிக் கொண்டு தப்ப முடியாது. உன்னைச் சட்டம் கட்டுப்படுத்தும்" என்றார். இப்போது நீ மிருகம் தானே? என்கிறார் ஏன் இந்த முரண்பாடு? என்று.

விட்டதனால் அவனுக்கு அரச கடமை ஏது என்றும், வாலி-சுக்ரீவர்களின் குடும்பச் சண்டையில் இவர் எப்படி தலையிடலாம் என்றும் கேட்கப்படுகிறது.

இதற்கு "ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள, நீ போய், சடைகள் தாங்கி..." முதலியன ஆதாரமாகக் காட்டப்படுகின்றன.

இங்கு ஒரு விஷயம் நன்கு கவனிக்கத்தக்கது. கைகேயி இராமனுக்கு உத்திரவு இடுங்கால், இராமன் திரும்பி வரவே கூடாது என்றும், அவனுக்கு என்றென்றைக்கும் ராஜ்யத்தில் இனி தொடர்பு கூடாதென்றும் அவள் நினைத்திருக்கலாம்.

ஒருவர் எப்படி நினைத்தபோதிலும் சரி, அது பிறரைக் கட்டுப்படுத்தாது. அவரது வார்த்தை-கட்டளை எதுவோ, அதுவே கட்டுப்படுத்தும்.

தவிரவும், . இங்கு கைகேயி கட்டளை இட்டாலும், அந்த இராமன் தந்தையின் கட்டளையாகவே மதித்து ஏற்கிறான்.

"...நின் பணி மறுப்பனோ யான்" என்றது உபசார வார்த்தையே.

"இது எப்படி?" என்று வாசகர்களுக்கு வியப்பாகத் தோன்றும்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"தான். ஆனாலும், "தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை" என்பதுதான். வடமொழிப் பண்பிலும் "பித்ரு வாக்ய பரிபாலனம்" என்றே வழங்குகிறார்கள். "மாத்ரு வாக்ய பரிபாலனம்" என்பதில்லை. தாயைத் தெய்வம்போல் நினைந்துச் சேவை செய்யலாம்-செய்யவேண்டும். ஆனால், பேச்சுக்கு மதிப்பென்றால், தந்தை சொல்லுக்குத்தான்.

இதை இராமன் சொல்லாமல் சொல்லி விளக்குகிறான். கௌசல்யை புலம்புகிறாள் இராமனின் வனவாசத்தை நினைத்து. இராமனுக்கு ராஜ்யத்தில் எவ்வித சம்பந்தமும் கூடாது என்று நினைத்தாலும் பேசினாலும் அதற்கு யாதொரு மதிப்பும் இல்லை.

கைகேயிக்கு, தான் கொடுத்த வரத்திற்காக இராமனைக் காட்டிற்கு அனுப்ப அவள் கேட்டபடி தசரதன் இணங்க வேண்டியதாயிற்று. அவர் விரும்பாவிடினும், அதுதான் நியாயம் என்பதை உணர்ந்து இராமன் தந்தையின் வாக்கைக் காப்பாற்றுகிறான். ஆகையால், இங்கு காட்டிற்குப் போவது ஒன்றுதான் வரத்தின்படி கட்டுப்பட வேண்டிய விஷயம். மற்றபடி இராமனுக்கு ராஜ்யத்தில் உள்ள உரிமை யாராலும் பறிக்க முடியாதது. ஆக, இராமன் காட்டுக்குப் போனான் என்றால் ஏதோ ஒரு காரணத்திற்காகவே.

அரசன் என்கிற உரிமையை விடாமலேயேதான் காட்டில் வாழ்கிறான். ஆனால், விநயம் வெளிப்படப் பேசுகிறான், பரதனுக்கு நான் ஏவலாள் என்று.

ஆக, எவ்விதத்திலும் கைகேயியின் சொல்படி இராமன் அரச உரிமை அற்றவனாக இருக்கவில்லை. குடும்பச்சண்டை என்பதும் ஒவ்வாத காரணம். குடும்பச் சண்டையானாலும் அதில் தலையிட அரசுக்கு உரிமை உண்டு.

இக்காலத்திலும் பார்க்கிறோம். அண்ணன் தம்பி சண்டை கொலையில் முடியுமானால், அரசு ஒதுங்கி நிற்பதில்லை. தானே முன்வந்து தண்டனை விதிக்கிறது. பெற்ற குழந்தையை ஒரு பெண் அனாதையாக எறிந்து விட்டுப் போனால்கூட தண்டனை கிடைக்கிறது. அரசுக்கு உரிமை எந்த விஷயத்திலும் உண்டு.

இனி, இராமன் கூறும் மற்றொரு காரணம், சுக்ரீவன் தன்னைச் சரணடைந்தான் என்றும், அதனால் அவனைக் காக்க உன்னை அடித்தேன் என்பதும், இங்கு கண்ணனுடைய உதாரணத்தைக் காட்டி, பாண்டவர்

இப்படி இருப்பினும், இவர் பாரதப் போரில் பாண்டவர்களைக் காக்க ஒருக்கால் ஆயுதம் எடுத்து விடுவாரோ. என்று அஞ்சி, பீஷ்மர் கிருஷ்ணனிடம் ஒருவரை அனுப்பி ஆயுதம் எடுப்பதில்லை என்று வாக்குறுதி வாங்கி வரும்படி செய்கிறார். அதனாலேயே கிருஷ்ணன் கட்டுப்பட்டவராகிறார். இல்லாவிடில், அவரும் ஆயுதம் ஏந்தியிருக்கலாம்.

இங்கு ராமனுக்கு அப்படி ஒரு நிபந்தனை எதுவும் இல்லை.

வாலிவாதம் அவசியமற்ற நிகழ்ச்சி என்று கருதப்படுகிறது.

இதுவும் சரியன்று. ஆண்டவனின் செயலில் எதுவும் அவசியமற்றதன்று. ஆண்டவன் என்னும்பொழுது ராமனை மனிதனாக நினைந்தே பேசுகின்றேன்.

சம்பூகன் என்பான் ஒருவன், காட்டில் தலைகீழாக மரத்தில் தொங்கிக் கொண்டு கீழே புகையைப் போட்டு கடும்தவம் புரிந்ததாகவும், அதனால் எங்கோஒரு குழந்தை அகால மரணம் அடைந்ததாகவும், அக்கால முறைப்படி தவம் செய்யத்தகாத அந்தச் சம்பூகனை அவன் செய்த குற்றத்திற்காக ராமன் வதம்செய்து இறந்த குழந்தைக்கு உயிர் கொடுத்ததாகவும் சரித்திரம் பேசுகிறது. இது, இராமாயணத்திலேயே உள்ள விருத்தாந்தம். இதுபோல, வாலியினால் ஒரு உயிருக்கு தீங்கு விளைந்தபோதிலும் அதைத் தடுப்பது காவலன் கடமையல்லவா ?

இராவணனைப் போல் இவனால் அதிகம் தீமை விளையவில்லையே என்பது கேள்வியல்ல. ஆக, இவ்வளவால் தெரிவது என்ன ?

- வாலி செய்தது குற்றமே!
- அந்தக் குற்றத்திற்குத் தண்டனை வதமே.
- அந்தத் தண்டனை தர ராமனுக்கு அதிகாரம் உண்டு.

"நீ சாதாரணக் குரங்கல்ல" என்றுதான் முன்பு பேசினாரேயன்றி, நீ குரங்கேயல்ல" என்று பேசவில்லை-பேசவும் முடியாது. வாலி மிருகம்தான் என்பதில் சந்தேகமில்லை.

ஆயினும், 'நேரேநின்று ராமன் ஏன் அடித்திருக்கக் கூடாது?' என்பதற்கு இது தினவடங்கும் சமாதானமாக இல்லைதான்.

இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ராமன் தந்திரத்தைத்தான் உபயோகித்திருக்கிறார்.

வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் நடந்த சண்டையில் சுக்கிரீவனுக்கு வாக்களித்த காரணத்தாலோ, அல்லது வாலியையே தண்டிக்க விரும்பியோ (இரண்டும் சேர்ந்து தான்) இடையே புகுந்து இராமன் அடித்தது சரிதான் என்பதை ஒப்புக்கொண்டுவிட்ட பிறகு மறைந்து அடித்தால் என்ன, நேரில் வந்தடித்தால் என்ன ?- என்று சிலர் பேசலாம்.

ஆயினும், ராமன் நேரில் வராமைக்கு ஏதோஒரு காரணம் இருக்கத்தான் வேண்டும். அதைப் பேசாமல் விட்ட காரணம்: அதைச் சொல்வது சிறிது அவமானம் என்ற கருத்தே.

உலகத்தில் புத்திமான்கள்-பெரியோர்கள் ஒன்பது விஷயங்களை மறைக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதில் ஒன்று அவமானம்.

இதே காரணத்தால் தான் ராமனும் தன்செய்கைக்குக் காரணம் சொல்ல மறுக்கிறார் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

வாலியின் மார்பிலிருந்த மாலைக்கு எதிரியின் பலத்தில் பாதியை இழுக்கும் சக்திஉண்டு இது வரத்தினால் பெற்றது. சூரியனால் அருளப் பெற்றது. இதை கம்பர் ஹநுமான் மூலம் வெளி

(11-ம் பக்கம் பார்க்க)

வங்கத் தமிழர்களே, ஒன்றுபடுங்கள்!

அது ஒன்றே உங்களுக்குப் பாதுகாப்பு!

தமிழின் எல்லை வேங்கட மென்றால்,
தாயகத்தின் எல்லை இமயமல்லவே!

வங்கத் தமிழரிடை ம. பொ. சி. பேச்சு

டிசம்பர் 9, 10, 11, 12 தேதிகளில் வங்கத் தலைநகரான கல்கத்தாவிலும், ஹௌராவிலும் ஐந்து இலக்கியக் கூட்டங்களில் வெவ்வேறு பொருள்கள் பற்றி ம. பொ. சி. சொற்பொழிவாற்றினார். இறுதியில் வங்கத் தமிழர் நடத்திய பிரிவுபசாரத்திற்கு நன்றி தெரிவித்து ம. பொ. சி. வெளியிட்ட கருத்துக்கள் இங்கே தரப்படுகின்றன.

வங்க நாட்டில் வாழும் தமிழர்கள், எனக்கும், என்னுடன் வந்திருப்பவர்களுக்கும் அளித்த மகத்தான வரவேற்புக்கும் உபசாரத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இது போன்ற நிகழ்ச்சிகள் தமிழரிடையே வளர்ந்துவரும் இன உணர்ச்சிக்கும், தாய்மொழிப் பற்றுக்கும் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

என்னுடைய உழைப்பும், பிரச்சாரமும் வெற்றியளித்து வருவதுகண்டு யான்பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

தமிழ் மக்கள் காடு கடந்தோ, கடல் கடந்தோ, மலைகடந்தோ வாழலாம். ஆனால் எந்த எந்த நாட்டில் வாழ்ந்தாலும், 'தமிழர்' என்ற இன உணர்வோடு வாழ வேண்டும். அதுதான், தமிழினத்திற்குள்ள பாதுகாப்பு.

உங்களிலே, சாதியால், பிராமணர் இருக்கலாம். அப்படியே பிறபிற சாதியார்களும் இருக்கலாம். மதத்தால் நீங்கள் இந்துவாகவோ, இஸ்லாமியராகவோ, கிருத்தவராகவோ இருக்கலாம். ஆனால், அதெல்லாம் வீட்டோடு, கோயிலோடு நிற்க வேண்டிய பிரச்னைகள். சமூக வாழ்க்கையிலே நீங்கள் எல்லோரும் தமிழர்கள். இந்த எண்ணத்திற்குக் கீழே வேறு எந்தச் சாதி சமய உணர்வுக்கும் இடந் தராதீர்கள்.

வங்கத் தமிழர்களே, தாயகத்தில் வாழும் தமிழர்கள் சாதிவழியிலோ, கட்சி முறையிலோ பிரிந்து பிரிந்து சண்டையிட்டுக் கொள்ளலாம். அச்சண்டைகளை, பத்திரிகைகளிலே நீங்கள் படிக்கவும் செய்யலாம். ஆனால், அதன் எதிரொலி வேங்கடத்திற்கு வடக்கே வாழும் தமிழர்களிடையே ஏற்படக் கூடாது.

ஆம்; தாயகத்திலுள்ள நாங்கள் உங்களுக்கு வழிகாட்டிகள் அல்ல. நீங்கள்தான் எங்களுக்கு வழிகாட்டிகளாக வாழ்ந்து காட்டவேண்டும். தாயகத்திலுள்ள எங்களுடைய சண்டைகள் வீட்டுக்குள்ளே நடப்பவை. அதிலே வெட்கப்படக் காரணமில்லை. ஆனால், வாழவந்த வெளி இடத்தில் உங்களுக்குள்ளே சண்டை ஏற்பட்டால், வங்காளிகள் உங்களை மதிக்கமாட்டார்கள்.

மொழிவழிச் சிறுபான்மையினரான உங்களுக்குள்ள ஒரே பாதுகாப்பு உங்களுடைய ஒற்றுமைதான்.

பிராமணர், பிராமணரல்லாதார் என்ற வேற்றுமை, அந்த வேற்றுமை வழிவளர்க்கப்படும் விரோதப்பான்மை தமிழினம் பெற்ற சாபமாகிவிட்டது. தமிழகத்திற்கு வெளியே வாழும் நீங்களேனும் அந்தச் சாபத்தற்கு விலக்காக வாழுங்கள்.

இனத்தால் நீங்கள் தமிழராயினும், வாழும் நிலத்தால் நீங்கள் எல்லோருமே இந்தியர்கள். தமிழகத்திலேயே வாழும் தமிழன், தான் இந்தியன் என்பதை மறந்தால் நஷ்டமில்லை. ஆனால், வேங்கடத்திற்கு வடக்கே குடியேறி வாழும் தமிழ்மக்கள் தாங்கள் இந்தியர்கள் என்பதைமறந்தால், வாழுகின்ற மாகாணத்து மக்களை அன்னியர்களாக நினைத்தால் அதற்கப்புறம் உங்களுடைய வாழ்க்கை இனிக்காது ஏன், வங்கத்தில் வாழவே உங்களுக்கு உரிமை இல்லை.

அதனால், "இந்தியர்" என்ற பெருமையோடு, "வங்கமும் நம்முடைய தாயகம்" என்ற உரிமை உணர்ச்சி கொண்டு வாழுங்கள்.

வங்கம் தரும் இன்பங்களை அனுபவிப்பதோடு நில்லாமல், வங்காளியருக்கு நேரும் துன்பங்களிலும் பங்கு கொள்ளுங்கள். என்ன விலை கொடுத்தேனும் வங்காளியரின் நல்லெண்ணத்தைப் பெற முயலுங்கள்.

தமிழகத்தில் மூன்று கோடி மக்களேயல்லாமல், முப்பது கோடி மக்களும் வாழலாம். ஆனால், அந்த ஜனத்தொகை, வேங்கடத்திற்கு வெளியே வாழும் தமிழர்களுக்குப் பாதுகாப்புத் தராது. மாறாக, வங்காளியரின் நல்லெண்ணத்தைப் பெறுவதன் மூலந்தான், உங்கள் வாழ்க்கை நலன்களுக்கு நீங்கள் பாதுகாப்புத் தேடிக் கொள்ள முடியும்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தில்மற்றொரு விஷயத்தையும் இங்கு நினைவுபடுத்துகிறேன். இந்திய தேசிய இனங்களிலேயே, தங்கள் தாயகத்திற்கு வெளியே சென்று வாழும் நிலையிலுள்ள இனத்தவர் தமிழினத்தவர்தான். மராத்திய நாட்டின் தலைநகரான பம்பாய், கூர்ஜரத்தின் தலைநகரான ஆமதாபாத், வங்கத் தலைநகரான கல்கத்தா, கேரளத் தலைநகரான திருவனந்தபுரம் இப்படி வேற்றுமொழி மாகாணங்களிலெல்லாம் தமிழர் குடியேறி வாழ்கின்றனர்.

இலங்கை, மலேயா, பர்மா, இந்தோனேஷியா போன்ற வேற்று நாடுகளிலும் தமிழ்மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் தொகை கொஞ்சமன்று; சுமார் முக்கால் கோடி. சிற்சில குறைகளிருப்பினும் பொதுவாக அவர்கள் நல்லவிதமாகவே வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

ஆனால், தமிழகத்திலே வாழும் நம்மவர்களிலே சிலர் வேங்கடத்திற்கு வேலி போட, தலைவாசல் கதவுகளுக்குத் தாள் பூட்டிப் போட, தமிழகத்தைச் சுற்றிலும் பகை மதிலெழுப்ப முயல்கின்றனர்.

இந்த எண்ணம், பிரிவினை இயக்கம், தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்களுக்குத் தீங்கு பயக்கும். அத்தகைய இயக்கங்களிடம் நீங்கள் கொஞ்சங்கூட அனுதாபம் காட்டக் கூடாது.

தமிழ்நாட்டில் வாழ பிறநாட்டானுக்கு உரிமை இல்லை என்றால், தமிழ்நாட்டான் மட்டும் பிறர் நாட்டில் வாழ உரிமையுண்டோ?

நாம் உலகினரை வரவேற்றால்தான் உலகம் நம்மை வரவேற்கும். மிகப் பெரிய உலகத்தை நம்முடையதாக்கிக் கொள்ளவேண்டுமானால், சின்னஞ்சிறிதான நம்முடைய நாட்டிலும் பிற நாட்டார் தங்கி வாழ அனுமதிக்க வேண்டும். தமிழகத்தில் வடநாட்டார் வாழ்வது சுரண்டுவதற்காக என்றால் பம்பாய்க்குப் போய் பன்னிராயிரம் ரூபாய் பண முடிப்பு வாங்கி வருவதும் சுரண்டல்தானே!

தமிழினத்தார் சர்வதேச இனத்தவராவர். அதனால்தான் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றான் புறநானூற்றுப் புலவன். இந்த நிலையிலிருந்து நாம் மாறக்கூடாது. தமிழகம் தாங்கமுடியாத அளவுக்கு தமிழ்மக்களின் தொகைபெருகி வருகிறது. எதிர்காலத்தில் இன்னமும் பயங்கரமாகப் பெருகக் கூடும்.

இப்படிப் பெருகிவரும் ஜனத்தொகைக்கு இடம் தேட நாம் படை எடுத்து நாடு பிடிக்கமுடியாது. இது சக்கரவர்த்திகளின் அல்லது சாம்ராஜ்யங்களின் சகாப்தமல்ல, ஜனநாயக சகாப்தம்.

ஆகவே, பெருகிவரும் ஜனத்தொகைக்கு வாழ்வளிப்பதற்கான ஒரே வழி இந்தியா முழுவதையுமே நம் சொந்த நாடாகக் கருதுவதேயாகும்.

இதனை ஒரு சூழ்ச்சியாகவே வைத்துக் கொள்ளுங்கள். இந்தச் சூழ்ச்சியைத் தவிர வருங்கால தமிழினத்தை வாழவைக்க வேறு வழியில்லை.

[11ம் பக்கம் பார்க்க]

செங்கோல்

24-12-61 ★ ஞாயிறு

டில்லிக்குச் செல்கிறார்!

தமிழக அசெம்பிளி முடிவுற்று கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் விடைபெற்றுக் கொண்டுவிட்டார்! ஆம்; அவர் பாராளு மன்றத்திற்குப் போட்டியிடுகிறாராதலால், அடுத்த அசெம்பிளியில் அங்கம் வகிப்பதோ, மீண்டும் இந்த மாநிலத்து அமைச்சராக வருவதோ சாத்தியமில்லை. அதனால், அசெம்பிளி உறுப்பினர்களிடம் விடைபெற்றுக் கொண்டுவிட்டார். விடைபெறுங்கால் அவர் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவு நேரில் கேட்டோரேயன்றி பத்திரிக்கைகளில் படித்தோரும் மனமுருகத் தக்கதாகும்.

தமிழகத்தில் முடிந்து கொண்டிருக்கும் ஐந்தாண்டு காலத்தில் நடைபெற்ற ஆட்சிமுறை – இங்கு மங்குமாக சில குறைகளைக் காட்டியிருப்பினும் – எதிர்க்கட்சியினரும் போற்றத் தக்கதாகும். அதற்கு, முதலமைச்சர் திரு. கு. காமராசர் அவர்களின் ஆற்றல் ஒரு காரணமென்றாலும், அந்தவகையில் அவருக்கு நாம் பாராட்டளிக்கக் கடமைப்பட்டிருப்பினும், அவர் அசெம்பிளித் தொகுதியில் போட்டியிடுவதால், நாம் நன்றிகூறி விடை கொடுக்கும் நிலை இப்போதைக்கு ஏற்படவில்லை.

ஆனால், இந்த மாநிலத்து ஆட்சி சமீப ஐந்தாண்டுகளில் மிகத் திறம்பட நடந்ததற்கு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுடைய நிர்வாகத் திறமையும் பிரதான காரணமாகும். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இல்லாத ஒரு அசெம்பிளியை நினைத்துப் பார்க்கும்போது, ஏதோ ஒரு குறைபாடு நமது கற்பனையில் தட்டத்தான் செய்கிறது. ஆயினும் காலம் 'சுப்பிரமணியங்களை' உற்பத்தி செய்யுமென்று நம்பலாம்.

தமிழரசுக்கழகத்தாராகிய நாம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்குப்பாராட்டு வழங்கக் கடமைப்பட்டுள்ளோம். வடக்கெல்லைக் கிளர்ச்சியின் போதும், 'தமிழ்நாடு' பெயர் போராட்டத்தின் போதும் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் நம்மிடம் நடந்து கொண்ட கண்ணியமான முறைதான், அந்தப் பிரச்சனைகளுக்குச் சுமுகமான முறையில் தீர்ப்புக் கண்டது. அவர் அப்படி நடந்து கொண்டதற்கு, தமிழரசுக் கழகத்திடம் அவர் வைத்துள்ள நல்லெண்ணமும் ஒரு காரணமாகும்.

தமிழக அமைச்சர்களில் எவரிடமும் நமக்குப் பகை உணர்ச்சி இல்லை. என்றாலும், நல்லெண்ணமே உண்டு என்பதை நாம் பிரகடனம் செய்ய முடியுமாயினும், நம்மிடம் நல்லெண்ணம் காட்டிய ஒரே அமைச்சர் நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியமாகத்தான் இருந்தார் என்பதைச் சொல்லாமல் இருப்பதற்கில்லை. அத்தகைய ஒருவர் அடுத்த முறையிலும் – காங்கிரஸ் அமைச்சரவையே ஏற்படுமானால் – அமைச்சராக வர வாய்ப்பில்லை என்பதை நினைக்கும் போது, தமிழரசுக் கழகத்தினர் ஒவ்வொருவரும் வருந்துவது இயற்கை. ஆயினும்; பொதுத் தேர்தலுக்குப் பிறகு மத்தியில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுமானால், அதில் திரு. சி. சுப்பிரமணியம் அமைச்சராவார் என்ற நம்பிக்கை நமது வருத்தத்தைக் குறைக்கின்றது.

திரு. சி. சுப்பிரமணியம் தமிழ் மொழியின் வளர்ச்சியில் காட்டியுள்ள ஆர்வம் தமிழர் ஒவ்வொருவரும் பெருமைப்படத் தக்கதாகும். தமிழை இந்த மாநிலத்து ஆட்சிமொழியாகவும், பி. ஏ. வகுப்புகளில் பயிற்சிமொழியாகவும் செய்த பெருமை, திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கே தனி உரிமை. அத்துறையில் அவர் கடுமையான எதிர்ப்புக்களுக்கும் ஈடு கொடுக்க வேண்டியிருந்தது. அவர் துவக்கி வைத்த இந்த மாறுதல்கள், அவர் டில்லிக்குச் சென்ற பின்பும் தொடருமென்று நம்புகின்றோம். இடைமறிவு ஏற்படுமானால், அதனை எதிர்த்துப் போராடத் தமிழரசுக் கழகம் தயங்காது என்பதனை இப்போதே சொல்லி வைக்கிறோம்.

இந்த மாநிலத்தில் கல்வி அமைச்சர் பதவி வகித்த பெருமை எத்தனையோ பேருக்கு உண்டு. ஆனால் அந்த இலாகாவை நிர்வகித்து தமிழ் மொழிக்கு வாழ்வு தந்த பெருமையில் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களை மிஞ்சுவோர் இனித்தான் தோன்ற வேண்டும். நிதி இலாகாவை நிர்வகித்த முறையிலும் இதே நிலைமைதான். சட்டசபையில் சர்க்கார் கட்சித் தலைவராக இருந்து எதிர்ப்புக்களுக்கு அவர் ஈடு கொடுத்த முறை, இனி வரவிருக்கும் சர்க்கார் கட்சித் தலைவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகும்.

இத்தனை சிறப்புகளுக்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்களை அசெம்பிளியில் உள்ள எதிர்க்கட்சிகள் அனைத்துமே பாராட்டியதில் வியப்பில்லை. அந்தப் பாராட்டுதல்களில் அசெம்பிளிக்கு வெளியே உள்ள தமிழரசுக் கழகத்தின் சார்பில் நாமும் பங்குகொள்ளுகிறோம். திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் எதிர்காலம் சிறந்துவிளங்குமென்பதில் நமக்கு சிறிதும் ஐயமில்லை. அவருடைய எதிர்காலம் தமிழினத்திற்குப் பெருமை தேடும் வகையில் அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

வரவேற்கிறோம்

இந்தியப் படைவீரர்கள், போர்ச்சுக்கீசியர் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள கோவா-டையூ-டாமன் பகுதிகளில் மங்களகரமான திங்களன்று பிரவேசித்திருக்கின்றார்கள்! ஆம்; தன்னுடைய விருப்பத்திற்கு மாறாகவே படையெடுப்பை நடத்தியிருக்கிறது நேரு ஆட்சி. அன்னியப் பகுதியைப் பிடிக்க அல்ல; தனக்கே உரிய ஒரு பகுதியை மீட்க!

இந்தியா, யுத்தத்தை விரும்பாத நாடு. நிச்சயமாக, ஒரு நாடு இன்னொரு நாட்டின் பகுதியை ஆக்கிரமிக்குமானால், அதனைக் கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறது பாரதம். அதுபோலவே ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காலனிப் பிரதேசங்களின் விடுதலையிலும் பாரதம் கவனம் செலுத்தி வந்திருக்கிறது. இந்தோசீனம், காங்கோ, [illegible] இந்தோனேஷியா போன்ற நாடுகளின் விடுதலைக்கு தார்மிக ரீதியில் ஆதரவு காட்டி வந்திருக்கிறது இந்தியா.

ஆகவே, போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்திலுள்ள இந்தியப் பகுதிகளைக்கூட பலாத்காரத்தின் மூலம் விடுவிக்க பாரதம் விரும்பவில்லை. ஆனால் டையூ-டாமன்-பகுதிகள் போர்ச்சுகீசிய நாட்டிற்குச் சொந்தமான பிரதேசங்கள் என்று லிஸ்பன் பிரகடனம் செய்துவிட்டது. இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் எண்ணத்திற்கு எதிராக! அதுமட்டுமின்றி, கோவானியர்களைத் துன்புறுத்தும் துடுக்குத் தனத்திலும் ஈடுபட்டுவிட்டனர் போர்ச் இராணுவத்தினர். இந்நிலையில் தன்னுடைய விரதத்துக்கு விலக்காகவேனும் படையெடுப்பு நடத்துவதைத் தவிர பாரதத்திற்கு வேறு வழியில்லை.

எதிலும் விதிவிலக்கு உண்டு. பாரதத்தின் பலாத்கார எதிர்ப்பு விரதமும் இந்த விதிக்கு உட்பட்டதே. அகிம்சையை மதமாகக் கொண்ட காந்தியடிகள்கூட பாகிஸ்தான் ஆக்கிரமிப்பிலிருந்து காஷ்மீரியர்களைக் காப்பாற்ற காஷ்மீருக்கு இந்திய ராணுவத்தை அனுப்பும்படி ஆலோசனை கூறினார். அது போன்றதுதான் கோவாமீது நடத்தப்பட்டுள்ள படையெடுப்பும். ஆகவே, உலகம் நம்மைக் குறை கூறுவதற்கில்லை.

இந்தியா படையெடுத்தது கண்டு, பிரிட்டன் வருத்தம் தெரிவித்திருக்கின்றது. சூயஸ் கால்வாய்மீது அநீதியாக உரிமை கொண்டாடிப் படையெடுத்த பரங்கி நாடுதான், பாரதத்தின் செயல்குறித்துக் குறை கூறுகின்றது. அதனை, நாம் சட்டை செய்யத் தேவையில்லை. அரபு லீக், இந்தியாவின் செயலை ஆதரித்திருக்கிறது. ஐ. நா. மன்றமும் ஆதரிக்கும் என்று நம்பலாம். இந்தியாவின் விருந்தினராக வந்திருக்கும் சோவியத் ருஷ்யாவின் ஜனாதிபதியும், தனது நாட்டின் சார்பிலேயே பாரதத்தின் செயலை ஆதரித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். ஏன்? முன்பு போர்ச்சுகீசியருக்கு ஆதரவாக இருந்த பாகிஸ்தான் அதிபர்கூட பாரதம் படையெடுத்த பிறகு, 'பத்தினிவேஷம்' போடுகிறார்! போர்ச்சுகீசியரை பாகிஸ்தான் ஆதரிப்பதாகச் சொல்லுவது பொய்ப்பிரச்சாரம் என்கிறார் அயூப்கான். போர்ச்சுகீசியரை பாகிஸ்தான் ஆதரிக்கவில்லையென்பதனாலேயே, அந்த நாட்டை நாம் பாராட்டிவிட முடியாது. கோவாவின் விடுதலைக்கான நடவடிக்கையில் பாரதத்திற்குக் கைகொடுக்க பாகிஸ்தான் கடமைப்பட்டிருக்கிறது. நாளைக்கு பாகிஸ்தான் வேறொரு நாட்டால் ஆக்கிரமிக்கப்படுமானால், அதனை இந்தியா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அத்தகைய இழிதனம், துரோக புத்தி, காட்டிக் கொடுக்கும் கயமைத்தனம் இந்தியருக்கு உண்டா? — இல்லை.

சோதனை நேர்ந்துள்ள இத்தருணத்தில் பாகிஸ்தான் காட்டிய மனப்பான்மை, இந்தியர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும்

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

தேர்தலில் நம் கழகம் யாரை ஆதரிப்பது?

தில்லையில் ம. பொ. சி. பேச்சு

[17-12-61 ஞாயிறு மாலை தில்லை நகரில் தமிழரசுக் கழக சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. ம. பொ. சி. அவர்கள் பேசியதன் சுருக்கம்.]

தில்லைநகர்த் தமிழின மக்களே!

உங்களை எல்லாம் காணவும், உங்கள் நடுவில் சிறிது நேரம் பேசவும் மீண்டும் ஒருமுறை வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன். நான் இருந்து பேசவேண்டும் என்று கவிஞர் ஷெரீப் கேட்டுக்கொண்டார். அறுவை சிகிச்சைக்குப் பிறகு இருந்து பேசுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். ஆனால் இன்றோ, தில்லைப்பதியில் பேசுகின்றேன். நடராஜப் பெருமான் நமக்கெல்லாம் அருள்வழங்க ஒற்றைக்காலில் நின்ற வண்ணம் காட்சி அளிக்கிறார். இறைவனே நின்று கொண்டிருக்கும் இந்தப் பதியில் நான் இருந்துகொண்டு பேசுவது முறையன்று (சிரிப்பு) ஆகவே, இங்குமட்டும் நின்று பேசவே விரும்புகிறேன்.

இது தேர்தல் சீசன். ஆகவே, மேடைதோறும் தேர்தல் பற்றியே பேசக் கேட்கிறோம். எனது கழகம் தேர்தலில் போட்டியிடாத கட்சியாயினும், நானும் தேர்தலை மறந்துபேச முடியவில்லை.

"நாம் யாரை ஆதரிப்பது" என்று என்னுடைய தோழர்கள் கேட்கிறார்கள்.

"நீங்கள் யாரை ஆதரிக்கப்போகிறீர்கள்?" என்று உங்களைப் போன்ற பொது மக்களில் சிலர் கேட்கிறார்கள்.

"எங்களுக்கு ஆதரவு கொடுங்கள்"—"எங்கள் கட்சியை ஆதரியுங்கள்" என்று தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொருவரும், கட்சியும் என் வீடுதேடி வந்து கேட்கின்றன.

ஆனால், 'தமிழரசுக் கழகத்தின் ஆதரவு யாருக்கு?' என்ற பிரச்னை பற்றிப் பேசுவது என் கடமையாகும். ஆனால், நானோ தரும சங்கடத்தில் சிக்கியிருக்கிறேன். தேர்தலிலே, கூலி கொடுக்கும் கட்சிக்குக் கொடி பிடித்துக் கூச்சலிடும் கட்சியாகத் தமிழரசுக் கழகம் இயங்க முடியாது. இதுவரை அப்படி இயங்கியதும் இல்லை.

"என் கட்சிக்குப் பத்துத் தொகுதிகளை விட்டுக்கொடு; உன் கட்சிக்குத் தொண்ணூறு தொகுதிகளை என் கட்சி விட்டுக் கொடுக்கும்" என்று நான் பேரம் பேச முடியாது. இதுவரை அப்படிப் பேசியதும் இல்லை.

தமிழரசுக் கழகம் தேர்தலில் ஏதேனும் ஓர் கட்சியை ஆதரிக்கிறதென்றால், அது கொள்கை வழிப்பட்டதாகவே இருக்கும்:

கழகம், 1952-ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலிலே காங்கிரசுக்கு ஆதரவு அளித்தது. காரணம், கழகத்தின் கொள்கைகளில் ஒன்றாகிய தமிழ் மாநிலப் பிரிவினையை நிறைவேற்றித் தருவதாகக் காங்கிரஸ் தேர்தல் பிரகடனத்தில் வாக்

குவிந்திருக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்படும்" என்றோ உறுதி கூறப்பட்டிருந்தால், தமிழரசுக் கழகம் காங்கிரசுக்கு ஆதரவளிக்க இதற்குள் முன்வந்திருக்கும். ஆனால், மாகாண சுயாட்சி பற்றிக் காங்கிரஸ் தேர்தல் பிரகடனம் மௌனம் சாதிக்கிறது. இந்த நிலையில், கொள்கையிலே உறுதியுடைய நாம், காங்கிரசுக்கு ஆதரவளிக்க முன்வருவதெப்படி?

எதிர்க்கட்சிகளில் பிரதான கட்சியாக விளங்கும் தி. மு. கழகம், தன் தேர்தல் பிரகடனத்தை இன்றுதான் வெளியிடப் போகிறதாம்! இந்நேரம் வெளியாகியும் இருக்கலாம். அந்தப் பிரகடனத்திலே திராவிட நாட்டுப் பிரிவினை வற்புறுத்தப்படுமா? அதைக் கைவிட்டுவிட்டு மாநில சுயாட்சிக் கொள்கை மட்டுமே தி. மு. கவின் தேர்தல் லட்சியமாக அறிவிக்கப்படுமா? இந்த வினாவுக்கு விடை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். ஒருக்கால், இரண்டுமே தி. மு. க. வின் தேர்தல் அறிக்கையில் இடம் பெறலாம். அப்படி இடம்பெற்றால், அதிலே நான் திருப்தி அடைவதற்கில்லை. திராவிடப் பிரிவினையும், மாநில சுயாட்சியும் முரண்பாடுடைய கொள்கைகள், பிரிவினைக்குப் பரிகாரமே மாநில சுயாட்சி. பிரிவினையை வற்புறுத்திக் கொண்டே மாநில சுயாட்சி கோருவது, ஏககாலத்தில் இரட்டைக் குதிரைமீது சவாரி செய்வதாகும். இரட்டைக் குதிரை சவாரி தி. மு. க. விற்குப் பழக்கப்பட்ட வித்தை. மாநில சுயாட்சியை வண்டிக்குப் பின் பாரக் கல் போலப் பயன்படுத்துவது அரசியல் தந்திரமாக இருக்கலாம்; ஆனால், அரசியல் தருமமாகாது.

திராவிடப் பிரிவினையைத் தி. மு. கழகம் வற்புறுத்துமானால், அதை நான் எப்படி ஆதரிப்பது?

அடுத்தபடியாக என் கவனத்துக்கு வருவது கம்யூனிஸ்டு கட்சி. இந்தக் கட்சி, மாநில சுயாட்சிக் கொள்கையை தனது தேர்தல் அறிக்கையில் சேர்த்திருக்கிறது. அந்த அளவில், நம்மை அது நெருங்குகிறது. ஆனால், மற்ற கட்சிகளோடு உறவு கொள்வதிலே கம்யூனிஸ்டு கட்சியின் பார்வையிலே கோளாறு இருக்கிறது.

கடந்த பொதுத் தேர்தலிலே, தி. மு. கழகம் வடிகட்டிய பிற்போக்குக் கட்சி! என்று வருணித்தது கம்யூனிஸ்டு கட்சி. தி. மு. க—காங்கிரஸ் நேரடிப் போட்டியில் காங்கிரசின் வெற்றியையே அது உள்ளூர விரும்பியது.

இந்தப் பொதுத் தேர்தலிலே, "தி. மு. கழகம் இடது சாரித் தன்மையுடைய முற்போக்குக் கட்சி" என்று வருணிக்கிறது கம்யூனிஸ்டு கட்சி. தி.மு.க.வின் ஒத்துழைப்பைக் கோரி, உதவியை விரும்பி, அதனிடத்தில் வலியச்சென்று பேச்சுவார்த்தையும் நடத்துகிறது கம்யூனிஸ்டு கட்சி.

இப்போது, என் தோழர்களுக்கும் எதிரேயுள்ள பொது மக்களுக்கும் புரிந்திருக்கும் எனக்குள்ள தர்ம சங்கடம்! தமிழரசுக்கழகம், தமிழகத்தின் உரிமைக்குக் கேடின்றி, இந்தியாவின் தேசிய ஒற்றுமையை ஆதரிக்கிறது. ஆம்; எனக்கு தமிழின உரிமையும் தேசிய உறவும் இரு கண்போல. இந்த இரண்டையும் ஆட்சேபனை பின்றி ஏற்றுக்கொள்ளும் ஒரு கட்சி உண்டானால், தேர்தலில் அதையே ஆதரிப்போம். ஆனால், ஒரு கட்சியும் அப்படி இல்லை.

காங்கிரஸ் கட்சி தேசிய ஒற்றுமையை மட்டும் ஆதரித்து தமிழின உரிமையை மறுக்கிறது.

தி. மு. கழகம் தமிழினத்தின் உரிமையை ஆதரித்து, தேசிய ஒற்றுமையை எதிர்க்கிறது.

ஆம்; காங்கிரஸ்—தி.மு.க. இரண்டுமே ஒன்றில் நம்மோடு சேருகிறது; மற்றொன்றில், நம்மிடமிருந்து பிரிகிறது.

இந்த நிலையில், இரண்டில் நாம் எதை ஆதரிப்பதாக முடிவு எடுத்தாலும் அந்த முடிவு குறைபாடுடையதாக, குற்றமுடையதாக மக்களில் சிலர் கருதத்தான் செய்வர்.

தி. மு. க. தலைவர் அண்ணாதுரை திராவிடத் தனிநாடு பெற ரூபாய் 2 கோடி கேட்கிறார். அந்தத் தொகையைப் பெற வடக்குக்கும் யாத்திரை நடத்துகிறார். வடக்கே போய் பன்னிராயிரம் ரூபாய் திரட்டி வந்திருக்கிறார். இது, பெரும் தொகை தான். இதற்காகத் தி. மு. க. ஏடுகள் பெருமைப்படுவதும் நியாயமே. நானும் நண்பர் சம்பத்தும் பொறாமை கூடப் படலாம். ஆனால், இதிலே அரசியல்—பொருளாதார நுணுக்கம் இருக்கிறது. வடக்கு தெற்கைச் சுரண்டுவதாகக் கூறும் அண்ணாதுரை, வடக்கு சென்று பன்னிராயிரம் ரூபாய் பெற்றதும் சுரண்டல் தானே! ஒருக்கால், சுரண்டுவோரைச் சுரண்டுவதில் பிழையல்ல என்று அவர் கருதியிருக்கலாம்.

அவரது சுரண்டலை நானும் ஆதரிக்கிறேன். இன்னும் அவர் வடக்கை நன்றாகச் சுரண்ட வேண்டும். இந்தச் சுரண்டலுக்காகவேனும் வடக்கோடு தெற்கு பிணைந்திருக்க வேண்டும் என்பதுதான் என் கொள்கை. வடவர் சுரண்டினால் மூன்று கோடி தமிழரிடம்தான் சுரண்ட முடியும். நண்பர் அண்ணாதுரையோ, முப்பது கோடி வடவரிடம் சுரண்டலாம்.

அண்ணாதுரை இலங்கைக்குச் சென்றிருந்தால், பர்மாவுக்குப் போயிருந்தால், அந்த நாடுகளிலுள்ள தமிழர்களும் அவருக்குப் பண முடிப்பு கொடுக்கலாம். ஆனால், அவர்கள் கொடுக்கும் பண முடிப்பை அண்ணாதுரை இங்கே கொண்டுவந்திருக்க முடியுமா?—முடியாது. ஏன்? பர்மாவோ, இலங்கையோ இந்தியாவோடு இணைந்திருக்கவில்லை. பம்பாயும் சென்னையும் இந்திய அரசில் இணைந்திருப்பதால்தான், வடக்கே போய் பன்னிராயிரம் திரட்டிவரமுடிந்தது. அண்ணாதுரை பெற்ற இந்த அனுபவமேனும் பிரிவினையில அவருக்குள்ள நம்பிக்கையைக் குறைக்கும் என்று நான் நம்புகிறேன்.

தமிழகத்தைத் துண்டாடி வேங்கட மலையை மதிலாக்க விரும்புவது, தமிழினத்தின் எதிர்காலத்துக்குச் செய்யும் கேடாகும். தமிழகத்தின் நில அளவு நாற்பதாயிரம் சதுர மைல் தான். மக்கள் தொகையோ—மூன்று கோடி. ஆம்; நிலம் சிறியது; ஜனத்தொகை பெரியது. அடுத்த 50 ஆண்டுகளுக்குப் பின் மூன்று கோடி ஜனத்தொகை 30 கோடியாகவும் வளரலாம். அந்த வளரும் ஜனத்தொகைக்கு வாழ இடம் வேண்டாமா? இது, ஏகாதிபத்திய சகாப்தமல்ல; தமிழர் படையெடுத்து நிலம் பிடிக்க! ஜனநாயக சகாப்தமாதலால் உறவு கொண்டுதான் நிலம் பிடிக்க வேண்டும். பரந்துகிடக்கும் பாரதத்தோடு நாம் உறவு கொண்டிருந்தால்தான், வளர்ந்து வரும் ஜனத்தொகைக்கு பரந்து வாழ இடம் கிடைக்கும். வேங்கடத்துக்கு வேலி கட்டி வாழ நினைத்தால், அதனால் தீய விளைவுகளை நாமே அனுபவிக்க வேண்டி ஏற்படும். அதனால்தான், "உரிமைக்கு எல்லை வேங்கடம்; உறவுக்கு எல்லை இமயம்" என்கிறது தமிழரசுக் கழகம். உறவை மட்டுமே வற்புறுத்தி உரிமையைப்பறிகொடுக்கிறது தமிழ்நாடு காங்கிரஸ். உரிமையை மட்டுமே வற்புறுத்தி வடக்கோடு நமக்குள்ள உறவை அழிக்க முயல்கிறது தி. மு. கழகம். தமிழரசுக் கழகமோ, உரிமையைப் பாதுகாத்து, உறவைப் பலப்படுத்த முயல்கிறது. 'இது முடியுமா?' என்று கேட்கலாம். முடிந்திருக்கிறதே அமெரிக்காவில்! முடிந்ததைப் பார்க்கிறோமே ருஷ்யாவில்! சுதந்திரமுள்ள 18 மாநிலங்கள் கொண்ட சோவியத் ருஷ்யா பலமுள்ள நாடாகக் காட்சியளிக்கிறதே! சுயாட்சி மாநிலங்கள் 48 ஐக் கொண்ட அமெரிக்கா தனியாக கம்யூனிஸ்டு அகிலத்துக்கே அறைகூவல் விடுமளவுக்கு வலுப்பெற்றிருக்கிறதே! அதுபோலச் சுயாட்சி மாநிலங்களைக் கொண்ட சமஷ்டி இந்தியா உலக வல்லரசுகளெல்லாம் மதிக்கும் நல்லரசாய் விளங்க முடியும்.

காங்கிரஸ் கட்சி தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்னையைத் தேர்தல் கொள்கையாக வெளியிட்டிருக்கிறது

குறுதி கொடுக்கப்பட்டதால் தான். அந்த வாக்குறுதி தந்திலையானால், 1952-இல் தமிழரசுக்கழகம் காங்கிரஸை ஆதரித்திருக்காது.

இந்தத் தேர்தலில், தமிழரசுக் கழகத்தின் முன்புள்ள முதல் பிரச்னை முக்கியப் பிரச்னை, தமிழகத்திற்குச் சுயாட்சி அந்தஸ்தைத் தேடுவதாகும். காங்கிரஸ் தேர்தல் பிரகடனத்திலே "மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கப்படும்" என்றோ, "மத்தியில்

அடுத்த இதழில்...

"தி. மு. க.வின் தேர்தல் அறிக்கையும், தமிழினத்தார் கடமையும்"

என்பது பற்றி ஆசிரியர் ம. பொ. சிவஞானம் எழுதும் விரிவான சிறப்புக் கட்டுரை வெளிவரும்.

— நிர்வாகி

இது தேவைதானா? இடையே என்ற தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிக் காங்கிரஸ் கட்சி கூக்குரலிடுவானேன்? பிரிவினைச் சக்தி வளர்ந்து வருகிறதாம்! தேசிய ஐக்கியத்துக்கு, பாரத சுதந்திரத்திற்கு அபாயம் நெருங்கி வருகிறதாம். இப்படிக் கூறுவோர் ஆட்சிக்கு எதிரானவர் அல்லர்; ஆட்சியாளர்களே கூறுகின்றனர். ஆட்சியின் பிரதமரான,

(8-ம் பக்கம் பார்க்க)

கோவாவின் விடுதலைப் போர் வரலாறு

இந்தியாவில் ஆதிக்கம் பெற்ற ஆங்கில-டச்சு-பிரெஞ்சு போர்ச்சுகிசிய வல்லரசுகளிலே முதன் முதலாக இந்திய மண்ணை ஆக்கிரமித்தது, போர்ச்சுகிசிய வல்லரசேயாகும். அதுதான், இறுதியாக வெளியேற்றப்படும் வல்லரசாகவும் இருக்கிறது.

போர்ச்சுகிசிய வல்லரசின் ஆதிக்கத்தில் உள்ள இந்தியப் பகுதிகள், கோவா - டையூ - டாமன் ஆகிய மூன்று பகுதிகளுமாகும். டையூ - டாமன் ஆகிய இரு பகுதிகளும் குசராத் மாநிலத்தைச் சேர்ந்த சௌராஷ்டிராவிலும், சூரத்தின் அருகாமையிலும் இருக்கும் கடலோரப் பகுதிகளாகும்.

இந்த இரண்டும் இம்மாதம் 18ம் தேதி திங்களன்று காலை -இந்திய ராணுவம் படையெடுத்தபோது - எதிர்ப்பின்றியே கைப்பற்றப்பட்டு விடுதலை பெற்று விட்டன.

மூன்றாவதான கோவா, மராத்தி மாநிலத்தைச் சார்ந்ததாகும். அங்குதான் போர்ச்சுக்கிசிய வல்லரசு இந்திய ராணுவத்தை எதிர்த்து இறுதிப்போர் நடத்தி, அதில் தோல்வி கண்டுவிட்டது.

1946ம் ஆண்டிலேயே சமாதானமாக வெளியேறி விடுமாறு போர்ச்சுகிசியருக்கு காந்தியடிகள் வேண்டுகோள் விடுத்தார். அது பலனளிக்கவில்லை.

1947ல் ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறிய போதே அவர்களைப் பின்பற்றி போர்ச்சுகிசியரும் வெளியேறி இருக்கலாம், அதுவும் நடக்கவில்லை.

பின்னர், 1954ல் பிரெஞ்சு வல்லரசு புதுவை-காரைக்கால்-சந்திரநாகூர் ஆகிய இந்தியப் பகுதிகளிலிருந்து வெளியேறிய போதேனும், போர்ச்சுகிசியரும் வெளியேறி இருக்கலாம். அப்படியும் நடக்கவில்லை. இறுதியாக, அண்மையில் இந்தியாவுடன் சமாதானப்பேச்சு வார்த்தை நடத்துமாறு ஐ. நா. மன்றப் தும் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துவந்தன.

போர்ச்சுகிசிய இராணுவத்தினர் இந்திய எல்லையோரப் பகுதிகளில் புகுந்து அங்கெல்லாம் வாழும் இந்தியருக்குத் தொல்லை கொடுத்தனர்.

வெளியேறும்படி நேர்ந்தால், அப்போது தன் ஆதிக்கத்தில் இருந்த இந்தியப் பகுதிகளை முற்றிலும் அழித்து மயானமாக்குவதற்கும் போர்ச்சுகிசியர் இரகசியத்தில் திட்டமிட்டிருந்தனர்.

இந்த நிலையில், கோவாவிலுள்ள இந்தியமக்களை போர்ச்சுகிசியரின் கொடுமைகளிலிருந்து காப்பாற்றும் பொருட்டு, இந்திய மண்ணிலிருந்து அந்நிய ஏகாதிபத்தியத்தை வெளியேற்றும் பொருட்டு, டிசம்பர் 18ம் நாள் திங்களன்று காலை இந்தியப் படைகள் கோவா, டையூ,டாமன் ஆகிய மூன்று பகுதிகளிலும் பிரவேசித்தன.

அதிகப்படியான பலாத்காரம் உபயோகிக்கப்படக் கூடாதென்றும், பிரார்த்தனை ஸ்தலங்கள்-அவை எந்த மதத்தினருடையவையாயினும்-பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், விடுதலை பெற்ற பகுதிகளை உடனடியாக சிவில் நிர்வாகத்தில் வைக்க வேண்டுமென்றும், மக்களுக்கு விடுதலை அளிப்பதோடு- அவர்களுக்குச் சேவை செய்வதும் நோக்கமாக இருக்க வேண்டுமென்றும், படையெடுத்துள்ள இந்திய ராணுவத்துக்கு ஆணைகள் இடப்பட்ட

பலாத்கார ரீதியில் நடவடிக்கை எடுக்க நேர்ந்ததற்கு பிரதமர் நேரு தன் வருத்தத்தைத் தெரிவித்துள்ளார். ஆனால், அதைவிட வேறு வழியில்லை என்பதையும் அறிவித்திருந்தார்.

கோவாவில் 7 லட்சம் மக்கள் வாழுகின்றனர். அவர்களில் மிகப் பெரும்பாலோர் இந்திய ராணுவத்தின் படையெடுப்பை விரும்பி வரவேற்று, விழாக் கொண்டாடியுள்ளனர்.

1928ம் ஆண்டிலேயே, விடு போர்ச்சுகிசிய ஆதிக்கத்தின் அடக்குமுறை வெற்றி கண்டது.

இப்போது இந்திய அரசும் பொறுமையைக் கைவிட்டு, போர்க்கோலம்கொண்டு, அதில் வெற்றியும் கண்டிருக்கிறது.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்கட்சியை ஆட்டுவிப்பவரான பண்டித நேருவே கூறுகிறார். பிரிவினை கோரும் கட்சியைச் சட்ட விரோதமாகவும் ஆக்கக்கூடும் என்று பேசப்படுகிறது. கிரிமினல் சட்டத்தில் செக்ஷன் 153 கடுமையாக்கப்படுகிறது. தேசிய ஐக்கியத்தைக் காக்க டில்லியில் அவசர மாநாடு கூட்டப்படுகிறது.

தேசிய ஒற்றுமை அழிந்து வருவது உண்மையானால், பிரிவினைச் சக்திகள் வளர்ந்து வருவது நிஜமானால், அதற்கு யார்-எந்தக்கட்சி பொறுப்பு? எழுபது ஆண்டுகள் வாழ்ந்து, நன்கு வலுப்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிதான் நாட்டை ஆள்கிறது. அதனினும் சிறந்ததொரு கட்சி நாட்டில் இல்லை. காங்கிரசிலே தலைசிறந்து விளங்கும் அகில உலகப் புகழ் பெற்றுத் துலங்கும் பண்டித நேருதான் கடந்த 15 ஆண்டுகளாகப் பிரதமர் பதவி வகித்து வருகிறார்.

இந்தச் சூழ்நிலையிலும் பிரிவினை-பிளவு சக்திதான் வளர்ந்துவிட்டது என்றால், குற்றவாளிக் கூண்டில் நிற்கவேண்டியது காங்கிரஸ் கட்சிதானே? பிரதமர் நேரு மீதுதானே நாம் குற்றப் பத்திரிகை வாசிக்க வேண்டும்?

காங்கிரஸ் ஆளும்போதே-நேரு பிரதமராக இருக்கும்போதே தேசிய ஐக்கியம் அழிந்து வருகின்றது என்றால், தவறு காங்கிரசுடையதாகத் தானே இருக்கவேண்டும்? இந்த உண்மையை ஒப்புக்கொள்ளக் காங்கிரஸ் தயங்குவானேன்?

குற்றம்-குறை யாருடையதாயினும், தேசிய ஐக்கியம் காக்கப்பட்டாக வேண்டும். அதிலே, காங்கிரசோடு நமக்குக் கருத்து வேற்றுமை இல்லை.

ஆனாலும், தேசிய ஐக்கியத்தைக் காக்க வழி யாது? 153 விதியைக் கடுமையாக்குவதா? -இல்லை. சட்டங்களைக் கடுமையாக அமுல் நடத்துவதில் வெற்றி பெறலாம் என்றால், பிரிட்டிஷ் ஆட்சியே வெளியேறியிருக்க முடியாது. அழிவின் விளிம்புக்கு வந்துவிட்ட அரசுதான் அடக்குமுறையிடம் அடைக்கலம் புகும்.

"உள்நாட்டுக் கலகமே வளருமாயினும் நாட்டைத் துண்டாட நான் இடம் கொடுக்கமாட்டேன்' என்றார் நேரு. இது கடைசி நேரத்தில் சொல்லவேண்டிய வாசகமல்லவா? நேரு அவசரப்பட்டுப்பேசியிருக்கிறார் — இல்லை. அப்படிப் பேசித்தீர வேண்டிய அளவுக்குப் பிரிவினை அபாயம் வளர்ந்திருப்பதாக அவர் நினைக்கிறார். அவர் அப்படி நம்புவதில் ஓரளவு உண்மை உண்டு. ஆனால், பிரிவினைச் சக்திகளை வெல்வதற்கு நேரு கடைபிடிக்கும் நடைமுறையில் தமிழரசுக் கழகம் கருத்து வேற்றுமை கொள்கிறது. வேண்டியது, மொழிவழிப்பட்ட தேசிய ஒற்றுமை! மொழிப்பற்றையும் இனப்பற்றையும் அழிக்கும் ஒருமைப்பாடு அல்ல. தேசிய இனங்களின் அடிப்படையில் வளரும் ஒற்றுமையை டில்லி ஏற்காதென்றால், ஒருமைப்பாட்டை நாமும் ஏற்கமுடியாது. இந்தியைப் பொது மொழியாக்கி, இந்தி மொழியாளர் தலைமையை இந்தியர் அனைவரும் ஏற்பதுதான் ஒருமைப்பாடு என்றால், அதனை எதிர்ப்பது நமது தேசியக் கடமையாகும்.

வ. ஆ. மாவட்ட ஊழியர் கூட்டம்

வடாற்காடு மாவட்ட த. அ. க. ஊழியர் கூட்டமும், மாநில த. அ. க. 4-வது மாநாட்டு வரவேற்புக் குழு கூட்டமும். வ ஆ மா.தஅ.க. கூட்டமும் வேலூர் டவுன் ஹாலில், 31-12 61 ஞாயிறு காலை 10-மணியளவில், தலைவர் ம. பொ. சி., கவிஞர் ஷெரீப் முன்னிலையில் நடைபெறும். அவரவர் இதுவரை வசூலித்துள்ள மாநாட்டு நிதி பாக்கியை அடிக்கட்டுடன் தவறாது சமர்ப்பித்து கணக்கு முடிக்கவும், மாநாட்டு வேலைகளுக்கான உப கமிட்டிகள் நிறுவவும் வேண்டியிருப்பதால் தவறாது வந்திருந்து ஒத்துழைக்கக்கோருகிறோம். இதையே அழைப்பாக ஏற்றுக்கொள்ளக் கோருகிறோம். அன்று மாலை 6-மணிக்கு காந்தி திடலில் வே. கி. குப்புசாமி தலைமையில் 'மாநாடும் - மக்கள் கடமையும்" என்பது பற்றி ம. பொ. சி, கவிஞர் ஷெரீப் பேசுவார்கள்.

வரவேற்புக் குழுவினர்
வ. ஆ. மாவட்ட த. அ. க.
நகர த. அ. க.

பொதுச் செயலாளர் போர்ச்சுகீசிய வல்லரசுக்கு அறிவுரை கூறியிருந்தார். அதன் படியும் நடக்கவில்லை.

பிரிட்டிஷ் பேரசு இந்தியாவுக்கு அறிவித்ததுபோல, இந்தியாவுடன் சமரசப்பேச்சு நடத்துமாறு, போர்ச்சுகீசியருக்கும் அறிவுரை கூறியது. அதன்படியும் நடக்கவில்லை.

ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்தியப் பகுதிகளிலிருந்து வெளியேறி விடுமாறு போர்ச்சுகீசியருக்கு இந்திய அரசு இறுதி அறிவிப்பு கொடுத்தது, அதனையும் ஏற்கவில்லை.

இதற்கெல்லாம் மாறாக போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள இந்திய மக்களைக் கொடுமைப்படுத்

தலைக் கிளர்ச்சியின் பொருட்டு கோவா இந்தியர், தனிக் குழு அமைத்தனர். அடுத்த இரண்டாண்டுகளுக்குள் — 1930ல், காங்கிரஸ் கமிட்டி அமைந்தது. 1948லும், 1955லும் மிகப் பெரிய அளவில் விடுதலை இயக்கங்கள் உருவாயின. ஆனால், மிருகத்தனமான இராணுவ நடவடிக்கைகளால் அவை தோற்றன. இப்படி, இருபது முறை மக்களிடமிருந்து எழுச்சி தோன்றி, அத்தனையும் அடக்குமுறையால் ஒடுக்கப்பட்டன.

1954ல் தாத்தார், நகர் ஹவேலி ஆகிய இட்டுப்பகுதிகள், அச்சந்தர்ப்பத்தில் இந்தியாவின் உதவி கிடைக்குமென்று நம்பி, விடுதலைப் பிரகடனம் செய்தன. ஆனால், இந்தியா வேடிக்கை பார்த்ததால்,

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பறிவாரிவிடுவர். இதற்குப் பாகிஸ்தான் பதில் சொல்லியாகவேண்டிய காலம் வரப்போவது நிச்சயம்.

இந்தியாவுக்கு எதிராக போர்ச்சுகீசியர் நடமாட்டத்திற்கு வழி கொடுக்க அரபு ஐக்கியக்குடியரசு மறுத்துவிட்டது. அதற்காக அந்நாட்டுக் குடியரசின் தலைவரையும், மக்களையும் பாரதம் நன்றியறிதலோடு பாராட்டவேண்டும்.

முன்னூறு ஆண்டு அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு முப்பதாண்டு காலம் நடத்தி வந்த கிளர்ச்சியிலே வெற்றிகண்டு, விடுதலைக் கொடியை உயர்த்தியுள்ள கோவாவினியர்களை தமிழ் இனத்தின் சார்பில் மனமுவந்து வரவேற்று, வாழ்த்துகின்றோம்.

காலங்கடந்தேனும் கடமையைச் செய்ய முன்வந்த நேரு அரசையும் பாராட்டுகின்றோம்.

குஜராத்தியரான டையூ - டாமன் மக்களும், மராத்தியரான கோவா மக்களும் தத்தம் மாநிலத்தோடு இணைந்து, அத்துடன் தங்கள் விடுதலைப்போர் பூர்த்தியாகிவிட்டதாக எண்ணாமல், தங்கள் மொழி தாயகங்களின் விடுதலைக்காகவும் பாடுபடுவார்களென்று நம்புகின்றோம்.

தமிழ்நாடும் நீதிக்கமிஷனும்.

திரு. தே. வேலப்பன். எம்.ஏ.

(8)

மூன்றாவது நிதிக் கமிஷனை எதிர்நோக்கியுள்ள பல்வேறு சிக்கல்களையும், அவை பற்றி மாநிலங்கள் கொண்டுள்ள கருத்தையும், தமிழ் நாட்டின் நிதித் தேவையையும் ஒருசேரக் கண்டுவிட்ட நாம் இனி, தமிழ் நாட்டிற்குக் கமிஷன் எம்முறையில் உதவ முடியுமெனப் பார்க்கலாம்.

முதலில், வருமான வரிப் பங்கீட்டை எடுத்துக் கொள்வோம்: வங்காளத்தைத் தவிர பிற மாநிலங்களனைத்தும் இப் பங்கீடு மக்கட் தொகையடிப்படையில் மாநிலங்களிடையே நடத்தப்பட வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்துள்ளன. இப்பங்கீடு, ஒவ்வொரு மாநிலத்திலும் வசூலாகும் வருமான வரித்

யாக இருக்கிறது. வங்காளம், பிகார், அசாம் பகுதிகளில் கழிந்த இரண்டு திட்டங்களிலும் பல கோடி ரூபாய் செலவிடப்பட்டமைக்கு இதுதானே காரணம்? தென்னாட்டு நிலக்கரி தரங் குறைந்ததென்று கூறி, வடகிழக்குப் பகுதியில் முதல் முடக்கிவிட்டு, அம்முதலீட்டின் விளைவாக அப்பகுதி மக்களது வருமானம் வளர்ந்து, அதன் விளைவாக வருமான வரியும் பேரளவு அங்கே வசூலாக வழியேற்படுகிறது; இந்நிலையில் அப்பகுதிகளுக்கு வருமான வரியில் கூடுதலோர் பங்கைக் கொடுப்பதென்பது தீனியை வைத்துப் பால் கறக்கும் மாட்டுக்காரத் தந்திரமல்ல; தீனி தின்று சுரந்து நின்ற பாலை, மடுவில் வாய் வைத்துத் தானே குடிக்க முயலும் மாட்டுத் தந்திரமென்றுதான் சொல்ல வேண்

காரணம் மக்கட்தொகை கட்டுப்பாட்டுத் திட்டத்தின் வளர்ச்சியென்றும் சொல்லப்பட்டது. மக்கட் தொகையைக் குறைக்க வேண்டுமென்பது இந்திய அரசின் தலையாய திட்டங்களுளொன்று. அத்திட்டத்தை வெற்றிகரமாகக் கையாண்ட காரணத்தால் தமிழ் நாட்டிற்குரிய வரிப் பங்கு விகிதம் குறைய நேர்கிறதென்றால், இங்கே மத்திய அரசு தனியொரு பொறுப்புடையதாகிறது. ஒன்று, தமிழ் நாட்டின் பங்கை நிர்ணயிக்கும் போது, மக்கட் தொகை விகிதத்தோடு நில்லாது, கூடுதலோர் விகிதம் கிடைக்கப்பெற ஏற்பாடு செய்யவேண்டும், அல்லது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தால் இழக்க நேர்கிற வரிப் பங்கிற்கு ஈடாகத் தனி மான்யமாவது வழங்க வேண்டும்.

பங்கில் 8 சதவிகிதம் தமிழகத்திற்கு ஒதுக்கப்படவேண்டுமெனக் கோரலாம். இங்கு, குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்ட விளைவை நினைக்கும்போது இவ்விகிதம் மிகக்குறைந்ததோரளவேயென்பது வலியுறுத்தத் தக்கது.

வருமான வரி முழுவதையும் பங்கிடவேண்டுமா, அல்லது அதன் பகுதியொன்றை மட்டும் பங்கிடவேண்டுமாயென்று அடுத்த கேள்வி. மாநிலங்களின் தேவைக் கண்ணோட்டத்தில் பார்த்தால் வருமான வரி முழுவதையும் பங்கிட்டளித்தாலுங்கூடப் பற்றாது! ஆனால், அப்படிச் செய்தால், மத்திய அரசின் நிதிநிலை அசைவுறுமோ என்ற கேள்வி எழுகிறது. அத்தகைய அச்சத்திற்குத் தேவையில்லை. ஏனெனில் 1955, 56ல் இந்திய அரசினரின் ஆக மொத்த வருவாயில் 24 சதவிகிதம் பயன் தந்த வருமானவரி 1960-61ல் 17 சதவிகிதம் மட்டுமே தரவிருக்கிறது. சமதர்ம சமுதாய அமைப்பில், அரசினர் தொழிற்துறை வரவர வளரும் போது, காலப்போக்கில் மிகுவருவாய் பெறுவோர் தொகை குறைந்து வருமானவரிப் பயன் குறைவது தவிர்க்கயியலாததே. எனவே, வருமான வரியில், கூடுதலோர்

தொகையின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டுமென்பது வங்காளத்தின் விருப்பம். இவ்விருப்பம் சரியானதல்ல வென்பதை முதலாவது நிதிக்கமிஷன் கூடச் சுட்டிக்காட்டியிருப்பதை முன்பே பார்த்திருக்கிறோம். இன்றும் 1959-60ல், வருமான வரி மொத்த வசூலில் 62 சதவிகிதப் பங்கைத் தருவது வங்காளமும், மகாராட்டிரமும், குசராத்துமே யெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்நிலையில் வருமான வரியில் பெரும்பங்கு மேற்குறிப்பிட்ட மூன்று மாநிலங்களுக்குச் செல்ல நேரிடும்; எல்லாத் துறையிலும் மிகவுயர்ந்து விளங்கும் இம்மாநிலங்கள் இப்பேருதவியைப் பெறத் தகுதியுடையனவாக ஆக்கப்படுவது தவறென்பது தேற்றம்.

மேலும், இம் மூன்று மாநிலங்களும் பேரளவு வருமான வரி பயக்கக் காரணமென்னவெனப் பார்ப்போம்: அவை மூன்றும் தொழில் மயமாகி யுள்ளமையே யொழிய வேறொன்றுமில்லை. இம்முறையில் இவை தொழில் மயமாகக் காரணமென்ன? வங்காளப் பகுதியின் கனிவளமும், பம்பாய் வட்டாரத்தின் வணிகப் பெருமையுமே காரணம். இவ்வளமும் பெருமையும் நாடெங்கும் பரவலாகக் காணப்படாத நிலையில், இவ்விரண்டின் அடிப்படையில் வரிப் பங்கீட்டை நடத்துவ தென்பது வல்லவனையே வல்லவனாக்கிக் கொண்டிருக்கும் நெறி பிறழ்ந்த கொள்கையாகி விடும். மேலும், ஏராளமான மூலதன மில்லாக் காரணத்தால், எளிதில் கனி வளங்களைப் பயன்படுத்த வியல்கிற பகுதிகளில்மட்டும் தொழில்களை வளர்ப்பதென்பது இந்திய அரசின் தற்காலக் கொள்கை

டும்.

வேறெந்த அடிப்படையில், வருமான வரியைப் பங்கிடுவது? மாநிலங்கள் பல பொதுவாகக் குறிப்பிட்டுள்ள அடிப்படை மக்கட் தொகைதான். பல்வேறு மாநிலங்களது தேவையை ஏகதேசமாகக் கூறுவது அவ்வவற்றின் மக்கட் தொகையே யென்பது தெளிவு. எனவே, இந்திய மக்கட் தொகையில் 7.71 சதவிகிதத்தைத் தன்னுட் கொண்டுள்ள தமிழகம், மொத்த வருமான வரிப் பங்கில் 7.71 சதவிகிதத்திற்கு உரியதாகிறது.

இங்கே, வேறு சிலவற்றையும் கவனித்தாக வேண்டும். கழிந்த மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் போது, பல்வேறு மாநிலங்களில் மக்கட் தொகை வளர்ச்சி வேகம் பலதரப்பட்டதாக இருப்பதாக அறிய முடிந்தது. அங்கேயும் வங்காளமும், அசாமும் நம்பவியலாததோர் வேகத்தில்—முறையே, 32.94ம், 34.3ம் சதவிகிதத்தில் வளர்ந்துள்ளதாகக் காட்டப் பட்டுள்ளது. இங்கு, தமிழ்நாட்டின் மக்கட் தொகை வளர்ச்சி விகிதம் 11.73 சதவிகிதமே யாகும். வங்காளத்தில் மக்கட் தொகை வளர அப்பகுதியின் தொழில் வளர்ச்சி, அகதிகள் வருகை, இறப்பு விகித வீழ்ச்சி போன்ற பல சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. உண்மையில், இவைதாம் காரணமோ, அன்றி வரிப் பங்கீட்டில் கூடுதல் பங்கு பெறவேண்டுமென்ற கருத்தோடு செய்யப்பட்ட பொய்க் கணக்குக் காட்டவோ இதுவென நமது நிதியமைச்சரவர்கள் அப்போது ஐயுற்றது இயல்பானதே! மேலும், தமிழ்நாட்டில் மக்கட் தொகை வளர்ச்சி விகிதம் குறைவதற்குக்

மக்கட்தொகையை மட்டும் கவனித்தாற் போதுமா?—மக்கட் தொகை நெருக்கமும் மிக முக்கியமானதோர் சிக்கலல்லவா? மக்கள் மிக நெருங்கி வாழும் போது மக்கள் நலன் பேணுவதற்காக அரசுக்கு மிகு நிதி தேவை. இங்கும், வங்கத்திற்கும் கேரளத்திற்கும் அடுத்தபடியாக மக்கள்தொகை மிக நெருக்கமாயுள்ள மாநிலம் தமிழகமே! இங்கே சதுர மைலொன்றில் 671 பேர் வாழ்கிறார்கள். இவ்விகிதம் வங்கத்தில் 1031-ம், கேரளத்தில் 903-மாம். இங்கும், தமிழ்நாடு கூடுதலோர் பங்கிற்கு உரியதாகிறது.

மற்றுமோர் கேள்வியும் இங்கே நினைவு கூறத்தக்கது. மாநிலங்களது தனிநபர் வருவாய் தக்கதோர் அடிப்படையாக இராதா—என்பதே அக்கேள்வி. மக்கட் தொகையை விடவும் சாலச் சிறந்ததே இவ்வடிப்படை. ஆனால், இதுபற்றிய நம்பத்தக்க புள்ளிவிவரங்கள் அகப்படவில்லை. அகப்படுகிற புள்ளி விவரங்களை வைத்துப் பார்த்தால், தமிழ்மகன் வருவாய் ரூ. 250 என்றும், சராசரி இந்தியன் வருவாயோ ரூ. 330 என்றும் அறிய முடிகிறது. இந்நிலையிலும், தமிழ்நாட்டிற்குரிய பங்கின் அளவு பெரிதேயென்பது வெளிப்படை.

ஆக, எந்த அடிப்படையை யெடுத்தாலும், வருமானவரிப் பங்கீட்டில் தமிழகத்தின் பங்கைக் குறைக்க வழியில்லையென்பது தேர்ந்த முடிவு. இப்போதுள்ள நிலையில், மக்கட் தொகையே சாலச்சிறந்த அடிப்படையென்று கொள்ளலாம். அவ்வடிப்படையில் மொத்தப்

பங்கையோ, அல்லது வரி முழுவதையுமோ மாநிலங்களுக்கு நல்குவதால் மத்திய அரசு பேரளவில் எதையும் இழந்துவிடப் போவதில்லை. இருப்பினும், நிர்வாக வசதியைக் கருதும் போது வருமானவரி மத்திய அரசின் கையிலிருப்பதே நன்று. மேலும், மத்திய அரசின் பொறுப்புக்களில் பங்குகொள்ளும் உணர்ச்சியை மாநிலங்களிடையே ஊட்டுவதற்காகவும் வருமான வரியில் ஒரு பங்கை மத்திய அரசுக்கு நல்குவதில் தவறில்லை. ஆகவே, மாநிலங்களிடையே வருமானவரி முழுவதையுமல்லாது, அவ்வரியின் ஒரு பங்கை மட்டும் பகிர்ந்தளித்தல் நன்று. அப்பங்கு மாநில அரசின் செலவினங்கள் கட்டுமீறியுள்ள இன்றைய நிலையில், மொத்தத்தில் 75 சதவிகிதமாக இருக்கவேண்டுமென்பது, பல்வேறு மாநிலங்களின் ஒருமித்த கோரிக்கை. நாமும் அவ்விகிதத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

இங்கு, வருமான வரியமைப்பில் அண்மையில் நிகழ்ந்துள்ள மாற்றமொன்றைக் கவனிக்க வேண்டியுள்ளது. அகவே, கம்பனிகளாகிய தொழிற் பங்குக் கழகங்களின் மீதுள்ள வருமான வரி தற்போது கார்ப்பரேஷன் வரியெனத் தனியாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பெயர்க்காரணத்தால், இவ்வரியின் மீது மாநிலங்களுக்கு உரிமையில்லாது போகிறது. இதன் விளைவாக, முன்பு வருமான வரிப் பங்கின் வழியாகக் கிடைக்கப் பெற்றதில் மூன்றிலொரு பங்கை மாநிலங்கள் இழந்து நிற்கின்றன. எனவே, முன்பு கிடைக்கப்பெற்று வந்த தொகையாவது

(10-ம் பக்கம் பார்க்க)

தமிழ் நாடும், நிதிக்...

[9ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து கிடைக்கப்பெற வேண்டுமானால், இரண்டாவது நிதிக்கமிஷன் பரிந்துரையின்படி கிடைக்கப்பெற்று வந்த 60 சதமானப் பங்கோடு, (கார்ப்பரேஷன் வரிப் பெயர் மாற்றத்தால் இழந்துள்ள) அதன் மூன்றிலொருபங்கையுங் கூட்ட ஆக, 80 சதவிகிதப் பங்காவது மாநிலங்களுக்கென நல்கப்பட்டாக வேண்டும்.

இது, பழைய நிலையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக; புது

அரசுகள் மத்திய அரசிடம் மிகுந்தி கோருவதைத் தவறெனக் கூறவியலாது.

இங்கும், இவ்வரிப்பங்கை எவ்வடிப்படையில் மாநிலங்களிடையே பகிர்ந்தளிப்பதென்ற கேள்வி எழுகிறது. இவ்வரிக்காளாகிய பொருட்களை ஒவ்வொரு மாநிலங்களும் வாங்கித் துய்த்துப் பயனடைகிற அளவில் அடிப்படையில் பங்கிட்டளிப்பதே பொருத்தமானதெனலாம். ஆனால், இதுபற்றி புள்ளி விவரங்கள் கிடைப்பது மிகவருமையாக வுள்ளது. எனவே, மாநிலங்களது மக்கட் தொகையடிப்படையில் இவ்வரி

விகிதத்தை யுயர்த்தி, கூடுதலாகக் கிடைக்கிற தொகையை மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கக் கோரியது. மத்திய அரசு, அதற்கு ஒப்புக் கொள்ளாததோடு, தனது பொறுப்பில் விதிக்கப் படுகிற அடிப்படைக் கலால்வரியை மட்டும் மிகுத்து புது வசூலனைத்தையும் தனக்கே யுரியதாக்கிக் கொண்டது. மாநில அரசிடமுள்ள வருவாய்த் துறைகளையும் தான் பிடுங்கிக் கொண்டு, தனக்கு நலந்தருகிற முறையில் அவற்றை மத்திய அரசு பயன்படுத்துவது சமஷ்டியமைப்பின் சத்தல்ல; சத்துருவேயாகும்! இந்நிலையில், முன்பு அதிகப்படிக் கலால்வரி விதிக்க

டி. கே. எஸ். சகோதரர்களின் புதிய நாடகங்கள்

●

அமரர் கல்கிக்கு அஞ்சலி

சிவகாமியின் சபதம்

அமரர் 'கல்கி'யின் நினைவுக்காணிக்கையாக அவரது "சிவகாமியின் சபதம்" என்னும் வரலாற்று நெடுங்கதையைப் பிரபல நாடகக் கலைஞர்களான டி. கே. எஸ். சகோதரர்கள் மேடையேற்ற முனைந்துள்ளனர். இந்த நாடகம் பல்லவர் காலத்திய வரலாற்றுப் பொன்னேடாக விளங்கும்.

வசதி பெருக்கவேண்டு மென்றால் இதுபோதாது. புதுவழி கண்டாக வேண்டும். இந்நிலையில் புதிய கார்ப்பரேஷன் வரியையும் மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டாக வேண்டும். தொழில்கள் வளர்ந்து கொண்டிருக்கும் நம் நாட்டில் வருங்காலத்தில், தனி நபர்களை விட, தொழிற் கழகங்களே மிகு வருவாய் பெற வாய்ப்பிருக்கிறதென்பதை மறந்துவிடலாகாது. எனவே அத்தகையதோர் துறையில் மாநிலங்கள் பங்குபெற வாய்ப்பில்லாமற் செய்வது சரியல்ல.

இனி, கலால்வரிகளைப் பார்க்கலாம், 1955, 56ல் இந்திய அரசின் மொத்த வருவாயில் 27 சதவிகிதம் மட்டுமே பயந்த இவ்வரிகள் 1960-61ல் 37 சதவிகிதப்பயன் தரவிருக்கின்றன. இவற்றின் மொத்த வசூலும் சற்றுக் குறைய மூன்று மடங்குவரை வளர்ந்துள்ளது. இவ்வரிவசூலில். குறிப்பிட்ட சில பொருட்களின் மீதுள்ள வரியில் 25 சத விகிதப்பங்கே மாநிலங்களுக்கு இந்நாளில் நல்கப்பட்டு வருவதாக முன்பே பார்த்தோம்.

இன்று ஏறுமுகமாகியிருக்கும் வரி இது. மட்டுமல்ல, திட்டங்கள் வெற்றியுற்று உற்பத்தி பெருகும்போது, வருங்காலத்தில் மிகுபயன் தரும் வரிஇதுவே ஆகவே. செலவுக்குத் தக்கதோரளவில் வளர்ந்து வருகிற ஒரே வரியினம் இதுவேயெனலாம். இந்நிலையில் மாநில அரசுகள் கலால்வரி யினத்தில் குறிப்பிட்டதோர் பகுதியை மட்டுமல்லாது, மொத்தம் வசூலாகுவதில் நான்கிலொருபங்கை மாநில அரசுகளிடையே பகிர்ந்தளிக்க வேண்டுமெனக் கோருவது நியாயமானதே. வருமான வரியின் வருங்கால வறட்சியைச் சிந்தித்தால் இக்கோரிக்கையின் நியாயம் தெளிவாகப் புலப்படுகிறது. மேலும், இந்திய அரசு கலால் வரியைப் பல்வேறு பொருட்கள் மீதும் அடுத்தடுத்து விதிக்கும் போது மாநில அரசுகள் விற்பனை வரி வழியாகப் பெறுகிற வருவாய் அடுத்தடுத்துக் குறைந்து வருமென்பதும் நினைவு கூறத்தக்கது எனவே தமது கொள்தல் "காமதேனு" (விற்பனைவரி) கறவை மாறும்போது, மாநிலயைப் பிரிப்பதே நடைமுறைக்குப் பொருந்துவதாகிறது. மேலும், நாடெங்கும் மக்களது வாழ்க்கைத் தரத்தில் பெருவாரியான அடிப்படை வேறுபாடுகள் இல்லாத நிலையில், நாட்டுமக்கள் பொதுவாக வாங்கித்துய்க்கும் பொருட்களின் அளவு ஒரேமாதிரியாகவே யிருக்குமெனக் கொள்வது ஏற்புடையதே. ஆகவே, மக்கள் தொகை யடிப்படையைக் கையாளும்போது, பொருட்களை மக்களெல்லோரும் வாங்கித் துய்க்கும் அளவு அங்கு புறக்கணிக்கப்பட்டதாகக் கருதவும் வழியில்லாது போகிறது. எனவே, கலால்வரி மொத்த வசூலில் 25 சதவிகிதத்தை மாநிலங்களிடையே அவ்வவற்றின் மக்கட் தொகையடிப் படையில் பகிர்ந்தளிப்பது நேர்மையானதோர் கோரிக்கையாகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, நிர்வாக வசதி கருதி துணி, புகையிலை ஆகியனவற்றில் மாநிலங்கள் விதித்து வந்த விற்பனை வரிக்குப் பதிலாக, மத்திய அரசு ஓர்அதிகப்படி கலால்வரி விதிக்க ஒப்புக் கொள்ளப் பட்டது. இப்புதுவரி விதிப்பால், மாநில அரசுகள் இழக்க நேர்**கிற தொகை தொடர்ந்து உறுதி செய்யப் பட்டதோடு, அத்தொகைக்கும் அதிகமாக வரிவசூலிருந்தால், அவ்வதிகத் தொகை மாநிலங்களிடையே பெரிதும் மக்கட் தொகை யடிப்படையில் பகிர்ந்தளிக்கப் படுமென்றும் முடிவு செய்யப் பட்டது. இம்முடிவை மாநில அரசுகள் அன்று மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டன. இது போன்று பிற** பொருட்களிலும் விற்பனை வரிக்குப் பதிலாக அதிகப்படிக் கலால்வரி விதிக்க வேண்டுமென இன்றும் வணிகர் பலர் விரும்புவதாக முன்பே கண்டோம். இங்கே மாநிலங்கள் முன் புதியதோர் சிக்கல் தோன்றியுள்ளது. பழைய நிலைப்படி மாநிலங்கள் விரும்பினால், விற்பனைவரி விகிதத்தைக் கூட்டி, தமது வருவாயைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பிருந்தது. இன்றோ அம்முறையில் செயலாற்றும் பொறுப்பு மத்திய அரசிடமுள்ளது. இரண்டாண்டுகளுக்கு முன்பு, தனது நிதிவசதி கருதி தமிழக அரசு முற்குறிப்பிட்ட பொருட்கள் மீதுள்ள அதிகப்படிக் கலால்வரி மத்திய அரசை அனுமதித்த தமது ஒப்பந்தத்தைத் திரும்பப் பெற நேரலாமென தமிழக அரசு நிதிக்கமிஷனுக்கு அளித்துள்ள தனது அறிக்கையில் போர்முரசு கொட்டுவது இயற்கை தானே ! எனவே, அதிகப் படிக் கலால் வரிகளெனும் போது, அடிப்படைக் கலால்வரியில் கொணரும் விகிதவுயர்வும் அவற்றின்பாற் படுமெனக் கூறி, அதிலும் மாநில அரசுகள் பங்கு பெற ஏற்பாடு செய்யப் பட்டாக வேண்டும்.

வரிப்பங்கீட்டில் இருதரக் கருத்துக்களுக்கு இடமளிக்கும் வகையிலுள்ள மற்றோர் வரி ரயில்வேக் கட்டணவரி. 1957ல் இவ்வரி விதிக்கப் பட்டபோது, அந்நாளைய நிதியமைச்சாராகிய திரு. டி. டி. கே. இவ்வரிமாநிலங்களது நிதிவசதி பெருக்குவதற்காகவே விதிக்கப்படுகிறதெனக் கூறினார் தற்போது, இவ்வரி ரயில்வேக் கட்டணத்தோடு இணைக்கப்பட்டுவிட்டது. ஆனால், ஆண்டுதோறும் ரூ. 12. 5 கோடி மாநிலங்களுக்குக் கிடைக்கப் பெற வழிசெய்யப்படுமென கூறப்பட்டுள்ளது. முன்னேறிக் கொண்டிருக்கும் பொருளாதார அமைப்பில் **போக்குவரத்து வளர்ச்சியோடு இவ்வரி ஆண்டுதோறும் அரைக்கோடி ரூபாய் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே, மாநிலங்களுக்கு என்றென்றும் ரூ. 12. 5 கோடியெனக் கூறுவது நியாயமல்ல. ஆகவே, இவ்வரி முன் போலத் தொடர்ந்து மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட வகை செய்யப்பட வேண்டும்.**

இவ்வரி பற்றிய சிக்கலில் மற்றொன்றும் கவனிக்கத் தக்கது இவ்வரியில் அண்மையில் நிகழ்ந்துள்ள மேற்கண்ட மாறுதலை இயற்றுமுன் மாநிலங்களோடு கலந்துரையாடவில்லையென்பது மறக்கற்பாலதல்ல. இப்போக்கு மத்திய -- மாநில உறவை ஆண்டான் அடிமை உறவாகக் கருதுவோர் பதவியிலுள்ளனரென்பதற்கோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. இதுபோன்ற செயல்கள் எதிர்காலத்தில் நிகழாதவாறு தடுக்கவுதவுகிற சில நடைமுறை விதிகளையும் மூன்றாவது நிதிக் கமிஷன் யாத்துத் தந்தால் நன்றாயிருக்கும். (தொடரும்)

மூலக்கதையைப் பேராசிரியர் கல்கி அவர்களின் பெருமையைப் பேணும் முறையில் கவிஞர் திரு. புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவர்கள் சிவகாமியின் சபதத்தை அருமையான நாடகமாக உருவாக்கியுள்ளார். அழகான பாடல்களும் இயற்றியுள்ளார். திரு. எம். கே. ஆத்மநாதன் அவர்களின் இசையமைப்பும் நாடகத்திற்குப் பெருமை தரும்.

மகோன்னதமான சரித்திரப் பின்னணியில் உருவாகியுள்ள இந்நாடகத்திற்குரிய காட்சியமைப்புகள் ஓவியர் திரு. வி. மாதவன் பிள்ளையவர்களின் கைவண்ணமாக எழில் பரப்புவதைக் காணலாம்.

சிந்தையைக் கவரும் சிவகாமியின் நடனங்களை இயக்குவிக்கும் பொறுப்பை நாட்டியக் கலாகேசரி வழுவூர் திரு. பி. இராமையா பிள்ளை அவர்கள் ஏற்றுள்ளார்.

விரைவில் அரங்கேற்றுவதற்கான முறையில் இந்நாடக ஏற்பாடுகள் வேகமாக நடைபெற்று வருகின்றன என்று மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றனர் டி. கே. எஸ். சகோதரர்கள்.

கவியரசர் தாகூருக்கு அஞ்சலி

தாகூரின் 'பலி'

கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் நூற்றாண்டு விழாவின் நினைவாக அவரது 'பலி' என்னும் நாடகத்தை **மேடையேற்றும் பணியில் டி. கே. எஸ். சகோதரர்கள் முனைந்துள்ளனர் இந்நாடகக் கதையைப் பிரபல எழுத்தாளர் திரு. அகிலன் அவர்கள் அருமையான முறையில் தமிழாக்கியுள்ளார். பாடல்கள் கவிஞர் திரு. புத்தனேரி ரா. சுப்பிரமணியம். இசையமைப்பு எம். கே. ஆத்மநாதன் அவர்கள். இந்நாடகம் 'சிவகாமியின் சபத'த்திற்கு முன்னதாகவே அரங்கேறிவிடும் என்று தெரிகிறது.**

செங்கோல்

சந்தா விபரம்

○

வருடச் சந்தா	10–00
ஆறு மாதச் சந்தா	5–00
மூன்று மாதச் சந்தா	2–50
தனிப் பிரதி	0–20

வங்கத் தமிழர்களே...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னதான் திட்டமிட்டாலும் மூலப்பொருள்களைப் படைக்காத தமிழகம் தொழில்வளம் பெற்ற நாடாகிவிட முடியாது. அதனால், இறைவன் கொடுத்த மூளை பலத்தையே நம்முடைய மூல பலமாகக் கருத வேண்டும். கருதி பாரதநாடு முழுவதிலும் பரவி நம்முடைய அறிவு பலத்தால் உத்தியோகங்களைப் பெற்று வாழவேண்டும்.

திரும்பவும் சொல்லுகிறேன். நாம் தமிழர் என்ற உணர்வும் கொள்ளவேண்டும். அதே நேரத்தில் 'இந்தியா' என்ற எண்ணத்தையும் பெறவேண்டும். இந்த இரண்டையும் பிணைத்து வாழ்வதன் மூலம்தான் தமிழினம் முன்னேற முடியும்.

வங்காளியரிலே இங்குமங்குமாக சிலர் உங்களை வெறுக்கவும் கூடும். நம்மவரில் சிலர், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்பதுபோல இங்கும் சிலர் வங்கம் வங்காளியருக்கே என்று சொல்லலாம்.

இது வெறியர்களின் சேன். ஆனால், அதனாலேயே, வங்க இனத்தார் அனைவருமே தமிழினத்தார் அனைவரையுமே வெறுப்பதாக நீங்கள் முடிவு கட்டிவிடக் கூடாது.

எப்பொழுதும், எந்த மாநிலத்திலும், சிறுபான்மையினரின் வாழ்வு கண்டு பொருமைப்படுவார் இருக்கத்தான் செய்வார்கள். அதனைசகித்துகொண்டால்தான் சிறுபான்மையினரின் வாழ்வு விலக்கும்.

இங்கு ஒரு வங்கப் பெரியாருக்கு வ. வே. சு ஐயர் மொழி பெயர்த்த ஆங்கிலத்திருக்குறளை உங்கள் சார்பில் நான் பரிசளித்தேன். அந்தப் பெரியார் தமது வீட்டையே திருவள்ளுவர் கலைமன்ற நடவடிக்கைகளுக்கு வழங்கியிருப்பதாக அறிந்து மகிழ்ந்தேன். அவர்தான் வங்க இனத்தாரின் பண்பாட்டுக்குப் பிரதிநிதி.

அவர் தம் வீட்டை நமக்குக் கொடுத்தார். அவருடைய இனத்தவரோ தங்களுடைய நாட்டையே நமக்குக் கொடுத்திருக்கின்றனர். அதற்கு நன்றிக்கடனாக நாம் எதைக்கொடுக்க முடியும். ஆம்; நம்முடைய வீட்டினும் நாட்டினும் பெரியதாக நாம் கருதும் திருக்குறள் நூலையே அவருக்குக் கொடுத்திருக்கிறோம்.

இங்குள்ள வங்காளியரோடு உறவு கொண்டு தமிழ் இலக்கியங்களின் சிறப்பை அவர்களுக்குப் போதியுங்கள். சிலம்பின் சிறப்பை, குறளின் மாண்பை, பத்துப்பாட்டின் பெருமையை, எட்டுத்தொகையின் அருமையை வங்காளியருக்கு எடுத்துச்சொல்லுங்கள். அதன் மூலம் வங்காளியர், தமிழர் உறவு வலுப்பெறும்.

கடந்த மூன்று நாட்களாக கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகக் குழுமியிருந்து என்சொற்பொழிவுகளைக் கேட்டீர்கள்.

இது, எனக்குச் செய்த பெருமை மட்டுமல்லாமல் தமிழ் மொழிக்குச் செய்த சிறப்புமாகும். இதற்கு நன்றி தெரிவித்து தமிழகத்திற்கு வெளியே உள்ள உங்களுடைய வாழ்வே வளம் பெறப் பிரார்த்தித்து உங்களிடமிருந்து பிரியாவிடை பெறுகிறேன்—வணக்கம்.

ஆசிரியருக்கு

மறைத்துப் பேசுகிறார்!

ஐயா,

2–12–61 ஒற்றைவாடை (சென்னை) கலையரங்கில் தி. மு. க. தேர்தல் நிதிக் கூட்டத்தில் பேசிய திரு. கருணாநிதி, சட்டசபையில் தி. மு. க.வின் சாதனைப் பற்றிப் பேசிய போது,

> "தமிழ்நாடு" எனப் பெயர் வைக்க தமிழகத்தில் சங்கரலிங்கனார் உட்பட்டத் தலைவர்கள் யாவரும் விடுபட்டபின் தி. மு. க.வின் சட்டசபை உறுப்பினர்களின் சாதனையால்தான் "தமிழ்நாடு" என்னும் பெயரை சென்னை மாநிலத்திற்கு அரசாங்கத்தினர் பெயரிட்டனர்."

என்றார். "தமிழ்நாடு" பெயர் போராட்டத்தில் தமிழரசுக் கழகத்தின் சாதனைகளை மக்கள் அறிவார்கள். பொறுப்புள்ள ஒருவர் இதனை மறைத்துப் பேசுவது முறையன்று.

வெ. நடராசன்
காங்கேயநல்லூர்

'எழுத்தெல்லாம் வரலாறே'

ஐயா,

தாங்கள் "செங்கோலி"ல் பிரதி வாரமும் எழுதிவரும் சிறு கட்டுரை முதல, தொடர் கட்டுரை வரை, ஒவ்வொன்றும் பெரிய வரலாற்றை உள்ளடக்கிய சிறப்பினைப் பெற்றிருக்கிறது. "வ. உ. சி.யும்—நானும்" என்ற தொடர் கட்டுரை பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தது. அதைவிடப் பெரியதான ஒரு உண்மையினை, வரலாற்றுச் சிறப்பினை இவ்வார 'செங்கோலி'ல் "இலக்கியம் பயிலுங்கள்" என்ற தலைப்பில் தாங்கள் எழுதி இருக்கும் கட்டுரையின் மூலமாகத் தெரியவந்தது. ஆம் அதுதான் தங்கள் பெயர்-முதலில் வைத்த பெயர் "ஞானப்பிரகாசம்" என்பதும் அந்தப் பெயர் 12 ஆண்டுகள் வரை தங்களிடம் ஒட்டிக் கொண்டிருந்துவிட்டு அதற்கு மேல் 'சிவஞானம்' என்ற பெயர் வந்த விதத்தினையும் அறிந்து மகிழ்ந்ததோடு, இன்னும் இதைப்போன்றபல உண்மைகளை-வரலாறுகளைத் தாங்கள் தொடர்ந்து எழுதி வருமாறு கோருகின்றேன்.

வாழ்க, ம. பொ. ஞானப்பிரகாசம் என்னும் தலைவர் ம.பொ. சிவஞானம்.

ஆ. செ. நரசிம்மன்
18-12-61 ஆற்காடு

வாலியைக் கொன்றது...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

விடுவதேபோல் வால்மீகியும் வாலியின் மூலமே வெளியிடுகிறார்.

உயிர்நீக்கும் தருவாயில் வாலி தம்பியை அழைத்து தன் மார்பிலிருக்கும் அந்த மாலையைத்தந்து அதன் மகிமையையும் சூசனையாகப் பேசுகிறான். இதில் விசேஷசக்தி உண்டு என்று.

ஆக, நேரில் வந்தால் தன் பலத்தில் பாதி போய்விடும் என்று கருதி ராமன் மறைந்து அடித்திருக்கலாம். அதை வெளிப்படையாகச் சொல்ல மனம் இடம் தரவில்லை என்றே நினைக்கிறேன். சுருங்கச் சொல்லின், வாலியைக் கொன்றது நீதியே! ஆனால், மறைந்து அடித்தது இராமனுக்கு என்றைக்கும் மறையாத இழுக்கே.

இதில் பெரியோர்கள் தங்கள் கருத்தை வெளியிட வேண்டுகிறேன்.

○

ம. பொ. சி. பதில்

திரு. தே. சீனிவாசாச்சாரியார், வடமொழியிலும், தமிழ்மொழியிலும் சிறந்த புலமையுடையவர். நடுவு நிலையோடு சிந்திக்கும் பண்புடையவருமாவார். ஆனால், வால்மீகி ராமாயணத்தை முதலாகக் கொண்டு ஆராய்வதால், என் கருத்திலிருந்து வேறுபடுகிறார். நானோ கம்பராமாயணத்தை முதலாகக் கொண்டு ஆராய்ந்துள்ளேன். ஆயினும், இராமன் மறைந்திருந்து வாலியைக் கொன்றது அழியாப் பழியைத் தந்து விட்டதாக இக்கட்டுரையாளரும் ஒப்புக்கொள்கிறார். அதுவே வாலியைக் கொல்ல இராமனுக்கு உரிமையில்லை என்பதை எதிர் மறையில் ஒப்புக்கொள்வதாகும். தான் செய்வது தவறென்பதை இராமன் உணர்ந்திருந்ததால்தான் மறைந்திருந்து அம்பெய்ய நேர்ந்தது. இல்லையேல், இராமன் தன் எதிரில் நின்ற மாத்திரத்திலேயே வாலியானவன் சகோதரர் சண்டையில் அன்னியர் தலையிட உரிமையில்லை என்ற வாதத்தைக் கிளப்பியிருக்கக் கூடுமல்லவா?

தம்பி சுக்ரீவனை அடித்து விரட்டி விட்டு அவன் மனைவியை வாலி கவர்ந்தது தான் குற்றமென்றும், வாலி இறந்த பிறகு அவன் மனைவி தாரையை சுக்ரீவன் அனுபவித்ததால் அதில் குற்றமில்லையென்றும் கூறுகிறார், கட்டுரையாசிரியர். தம்பியை விரட்டி விட்டு மைத்துனியை அபகரித்ததை விட, அண்ணனை அன்னியனைக் கொண்டு கொன்று விட்டு அண்ணியை ஸ்வீகரித்தது குற்றமற்றதா?

—ஆசிரியர்.

நடக்க இருப்பவை

மூவேந்தர் மன்ற இரண்டாம் ஆண்டுவிழா

26-12-61 செவ்வாய் மாலை 6 30 மணிக்கு (74 வது வட்டம்) வெங்கட்ரங்கம் பிள்ளை தெருவில் (திருவல்லிக்கேணி, கோஷா ஆஸ்பத்திரி அருகில்) பொதுக்கூட்டம் நடைபெறும். சிலம்புச் செல்வர்: ம. பொ. சி., அவ்வை தி. க. சண்முகம், மாவட்ட த. அ. க. தலைவர் கு. மா. பாலசுப்பிரமணியம், அமர அண்ணல் மற்றும் பலர் பேசுவர். அன்று காலை 8-30 மணிக்கு, குழந்தைகள் விழாவும், கொடியேற்று விழாவும் நடைபெறும் இரவுப்பள்ளி மாணவ-மாணவிகளுக்கு புத்தாடையும் இனிப்பும் வழங்கப்படும். பகல் 12 மணிக்கு ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்படும்.

சென்னை: 24-12-61 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி அளவில், இரண்டாவது நடுவட்ட தமிழரசுக் கழக பொது ஊழியர்கள் கூட்டம் திரு. கு. சுப்பிரமணியம் தலைமையில் நடுவட்டக் கழகப் பணிமனையில் (1-44 நைனியப்பன்தெருவில்)நடைபெறும். மாநில மாநாட்டிற்கு நிதி வசூல், பிரதிநிதிகள் அனுப்புதல் மற்றும் பல விஷயங்கள் பற்றியும் பரிசீலிக்கப்படும். கழகத் தோழர்கள் இதனையே அழைப்பாக ஏற்று கட்டாயம் வருகை தரவேண்டுகிறோம்.

மாநில சுயாட்சிக்கு...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று ஆசாத் முயன்றது போல, தமிழகத்திற்குச் சுயாட்சி வழங்குவதின் மூலம், திராவிடப் பிரிவினை, அல்லது தனித் தமிழ்நாடு அபாயங்களைத் தவிர்க்க முடியுமென்று தமிழரசுக் கழகம் கூறுகின்றது. தமிழகத்திற்கு சுயாட்சி வழங்காவிடில், அப்புறம் பிரிவினை தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் எச்சரிக்கிறது. ஆனால், பலம் வாய்ந்த மத்திய சர்க்கார் வேண்டுமென்பதற்காக பாரதத்தையே துண்டாட முயன்ற காங்கிரஸ் மேலிடம், அவ்வளவு எளிதில் மாநில சுயாட்சிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளுமென்று நம்புவதற்கில்லை. மகத்தானதொரு போராட்டத்திற்குப் பின்புதான், தமிழகம் சுயாட்சி அந்தஸ்தை அடையும். இதனை 'செங்கோல்' வாசகர்களுக்கு உணர்த்தும் பொருட்டே ஆசாத் அவர்கள் எழுதியுள்ள நூலை விமர்சித்து இந்தத் தொடர்கட்டுரையை எழுதி வந்தேன் என்பதைக் கூறி, இதனை முடிக்கின்றேன்.

*

கம்பனிலே சில காட்சிகள்

விழாவின் 2ம் நாள் நிகழ்ச்சி,

படுத்தி வைத்து, விழாவுக்கு வந்த சிறப்பித்தமைக்காக நன்றி தெரிவித்